# சுவாமி தயானந்தா கலை & அறிவியல் கல்லூரி

# மஞ்சக்குடி

முனைவர். சு. சிவகுமார்

தமிழ்த்துறை

**பாடத் தலைப்பு** – அற இலக்கியம், பதினெண்கீழ்க்கணக்கு நூல்கள், காப்பிய இலக்கியம், ஐஞ்சிறு காப்பியம், சைவ சமய இலக்கியங்களின் தோற்றம், வைணவ இலக்கியம்.

பாடத் தயாரிப்பு

முனைவர். சு. சிவகுமார்

# 2. அற இலக்கியம்

## பதினென் கீழ்க்கணக்கு நூல்கள்

*கீழ் = என்ற சொல்லுக்கு 'சிறிய' என்று பொருள்*

*கணக்கு = என்ற சொல்லுக்கு 'நூல்' என்று பொருள்*

*பதினெண் = என்பது பதினெட்டு நூல்கள்*

*குறைந்த அடிவரையறையுள்ள பதினெட்டு நூல்களின் தொகுப்பே பதினெண் கீழ்க்கணக்கு நூல்களாகும். இந்நூற்கள் அனைத்தும்,*

**'அறம்பொருள் இன்பம் அடுக்கி'**

*என்ற பன்னிரு பாட்டியல் பாடலால் அறம், பொருள், இன்பத்தை அடிப்படையாகக் கொண்டு வரும்.*

### பன்னிருபாட்டியல் - விளக்கம்

*கீழ்க்கணக்கு நூல்களுக்கான இலக்கணத்தைப் பன்னிரு பாட்டியல் விரிவாக எடுத்துச் சொல்கிறது.*

**"அடி நிமிர்பு இல்லாச் செய்யுள் தொகுதி**
**அறம்பொருள் இன்பம் அடுக்கி அவ்வத்**
**திறம்பட உரைப்பது கீழ்க்கணக்கு ஆகும்"**

*அடி குறைந்து வரும் கீழ்க்கணக்கு நூல்கள் அனைத்தும் அம்மை என்னும் அழகுடையது என்கிறது தொல்காப்பியம்.*

*கீழ்க்கணக்கு என்ற சொல்லாட்சியை கி.பி. 13, 14-ஆம் நூற்றாண்டில் மயிலைநாதரும் பேராசிரியருமே முதலில் பயன்படுத்தினர்.*

*பதினெண் கீழ்க்கணக்கு நூல்களை நினைவில் கொள்ள ஒரு பழம் செய்யுள் காணப்படுகிறது.*

**"நாலடி நான்மணி நானாற்பது ஐந்திணைமுப்**
**பால் கடுகம் கோவை பழமொழி மாமூலம்**
**இன்னிலை காஞ்சியோடு ஏலாதி என்பவே**
**கைந்நிலைய வாம்கீழ்க் கணக்கு"**

## அறநூல்கள் – 11

*பதினெண் கீழ்க்கணக்கில் பதினொரு நூல்கள் அறநூல்களாகும். அவை,*

1. *நாலடியார் - சமண முனிவர்கள் - 400 வெண்பாக்கள்*
2. *நான்மணிக்கடிகை - விளம்பி நாகனார் - 101 வெண்பாக்கள்*
3. *இன்னா நாற்பது - கபிலர் - 40 வெண்பாக்கள்*
4. *இனியவை நாற்பது - பூதஞ்சேந்தனார் - 40 வெண்பாக்கள்*
5. *முப்பால் (திருக்குறள்) - திருவள்ளுவர் - 1300 குறள் வெண்பாக்கள்*
6. *திரிகடுகம் - நல்லாதனார் - 100 வெண்பாக்கள்*
7. *ஆசாரக்கோவை - பெருவாயில் முன்றியார் - 100 வெண்பாக்கள்*
8. *பழமொழி - முன்றுறையரையனார் - 400 வெண்பாக்கள்*
9. *சிறுபஞ்சமூலம் - காரியாசான் - 100 வெண்பாக்கள்*
10. *முதுமொழிக்காஞ்சி - கூடலூர்கிழார் - 100 வெண்பாக்கள்*
11. *ஏலாதி - கணிமேதாவியார் - 80 வெண்பாக்கள்*

## அறநூல்கள் – ஆறு

*பதினெண் கீழ்க் கணக்கு நூல்களில் ஆறு நூல்கள் அகநூல்களாகும்.*

1. *கார்நாற்பது - கண்ணன் கூத்தனார் - 40 வெண்பாக்கள்*
2. *ஐந்திணை ஐம்பது - மாறன் பொறையனார் - 50 வெண்பாக்கள்*
3. *ஐந்திணை எழுபது - மூவாதியார் - 70 வெண்பாக்கள்*
4. *திணைமொழி ஐம்பது - மூவாதியார் - 70 வெண்பாக்கள்*
5. *திணைமாலை நூற்றைம்பது - கணிமேதாவியார் - 150 வெண்பாக்கள்*
6. *கைந்நிலை - புல்லங்காடனார் - 60 வெண்பாக்கள்*

## புறநூல் – ஒன்று

*பதினெண் கீழ்க்கணக்கு நூல்களில் புறநூல் ஒன்று ஆகும்.*

1. *களவழி நாற்பது - பொய்கையார் - 40 பாடல்கள்.*

**கீழ்க்கணக்கு நூல்களின் சிறப்புகள்**

- *கீழ்க்கணக்கு நூல்களில் அறநூல்கள் - 11*
- *அகநூல்கள் - 6*

- புறநூல்கள் - 1 (களவழி நாற்பது)
- மருத்துவம் பேசும் நூல்கள் - திரிகடுகம், சிறுபஞ்சமூலம், ஏலாதி
- ஒழுக்கம் பற்றி முழுமையாகப் பேசும் நூல் - ஆசாரக்கோவை
- அன்பின் ஐந்திணை பற்றிப் பேசும் நூல்கள் - ஆறு (அகநூல்கள்)
- நானூறு பாடல்களை உடைய நூல்கள் - நாலடி நானூறு, பழமொழி நானூறு
- நாற்பது பாடல்களை உடைய நூல்கள் - இன்னா நாற்பது, இனியவை நாற்பது, கார் நாற்பது, களவழி நாற்பது.
- தொகை நூல் - நாலடியார்
- ஒரே ஆசிரியர் பாடிய நூல்கள் இரண்டு - கணிமேதாவியார் (ஏலாதி / திணைமாலை நூற்றைம்பது)
- சங்க இலக்கியத் துறை கொண்ட நூல் - முதுமொழிக்காஞ்சி
- நூறு பாடல்களை உடைய நூற்கள் - ஐந்து (நான்மணிக்கடிகை, திரிகடுகம், ஆசாரக்கோவை, சிறுபஞ்சமூலம், முதுமொழிக்காஞ்சி)
- கலித்தொகை போல் 150 பாடல்களை உடைய நூல் - திணைமாலை நூற்றைம்பது
- பதினெண் கீழ்க்கணக்கு நூல்களுள் - திருக்குறள், நாலடியார், பழமொழி நானூறு முப்பெரும் அறநூல்கள்.
- பதினெண் கீழ்க்கணக்கைப் பாடிய தேவர்கள் - 16 பேர்
- பதினெண் கீழ்க்கணக்கில் அதிக சமய நூல் - சமணம்

## 1. திருக்குறள்

1. திரு + குறள் = திருக்குறள்,

குறுகிய அளவுடையது திரு என்னும் அடைமொழியைப் பெற்று திருக்குறள் என அழைக்கப்படுகிறது.

2. 1300 பாடல்கள் (133 அதிகாரங்கள்) 133 x 10 = 1330

3. **பா.வகை :** குறள்வெண்பா

4. **நூலாசிரியர் :** திருவள்ளுவர்

5. **சிறப்புப்பெயர்கள் :** இந்திய நூல்களில் அதிகப் பதிப்பு பெற்ற முதல் நூல் திருக்குறள். 1. தெய்வப்புலவர், 2. நாயனார், 3.

*பெருநாவலர், 4. முதற்பாவலர், 5. செந்நாப்போதகர், 6. நான்முகனார், 7. மாதானுபங்கி, 8. தேவர்.*

**6. திருக்குறள் வேறுபெயர்கள்:** *1. வள்ளுவம், 2. உலகப் பொதுமறை, 3. தமிழ்மறை, 4. முப்பால், 5. தெய்வநூல், 6. வாயுறை வாழ்த்து, 7. பொய்யாமொழி, 8. உத்தரவேதம்.*

## 7. காலம்

*திருக்குறளின் காலத்தைப் பற்றி பல்வேறு கருத்துக்கள் உள்ளன. அவைகளில் குறிப்பிடத்தக்கவை மட்டும்,*

| | | |
|---|---|---|
| 1. | வி.ஆர்.ஆர். தீட்சிதர் | - கி.மு. 1-ஆம் நூற்றாண்டு |
| 2. | மறைமலையடிகள் | - கிறிஸ்துவுக்கு 30 ஆண்டுகளுக்கு முன்பு |
| 3. | மா. இராசமாணிக்கனார் | - கி.மு. 1-3-ஆம் நூற்றாண்டு |
| 4. | தமிழண்ணல் | - சங்க காலத்திற்கு முன் |
| 5. | எஸ். வையாபுரிப்பிள்ளை | - கி.பி. 6-ஆம் நூற்றாண்டு |

## 8. நூல் பகுப்பு

*3 அதிகாரங்கள் - அறம், பொருள், காமம்*

### அறத்துப்பால் (நான்கு இயல்கள்)

| | | | |
|---|---|---|---|
| பாயிரம் | - நான்கு இயல் | (4 x 10 = 40) | |
| இல்லறவியல் | - இருபது இயல் | (20 x 10 = 200) | 380 பாடல்கள் |
| துறவறவியல் | - பதின்மூன்று | (13 x 10 = 130) | |
| ஊழியல் | - ஒன்று | (1 x 10 = 10) | |
| 380 பாடல்கள் | | 380 | |

### பொருட்பால் (ஏழு இயல்கள்)

| | | |
|---|---|---|
| அரசியல் | - | (25 x 10 = 250) |
| அமைச்சியல் | - | (10 x 10 = 100) |
| அரணியல் | - | (2 x 10 = 20) |
| கூழியல் | - | (1 x 10 = 10) |
| படையியல் | - | (2 x 10 = 20) |
| நட்பியல் | - | (17 x 10 = 170) |
| குடியியல் | - | (13 x 10 = 130) |
| | | 700 பாடல்கள் |

### காமத்துப்பால் (மூன்று இயல்கள்)

*ஆண்பால் இயல் - (7 x 10 = 70)*

*பெண்பால் இயல் - (12 x 10 = 120)*

*இருபால் இயல் - (6 x 10 = 60)*

**250 பாடல்கள்**

## 9. திருக்குறள் உரையாசிரியர்கள்

*உலகப் பொதுமறையான திருக்குறளுக்கு, அதன் பொருட்சிறப்பால் காலந்தோறும் ஏராளமான உரைகள் தோன்றிக் கொண்டே இருக்கின்றன. அவைகளுள்,*

*1. தருமர், 2. மணக்குடவர், 3. தாமத்தர், 4. நச்சர், 5. பரிதியார், 6. பரிமேலழகர், 7. திருமலையர், 8. மல்லர், 9. பரிப்பெருமாள், 10. கலிங்கர் போன்ற பத்துபேர் சிறப்புமிக்கவர்களாவர்.*

- *இவர்களுள் காலத்தால் முந்தியவர் - தருமர் (தரும சேனர்)*
- *காலத்தால் பிற்பட்டவர் - பரிமேல் அழகர்*
- *இந்த உரை நூல்களுள் தலைசிறந்த உரை - பரிமேல் அழகர்*
- *காலத்தால் பிற்பட்ட சிறந்த உரை எழுதிய உரையாசிரியர்கள் - மு.வ. நாமக்கல் கவிஞர், புலவர் குழந்தை.*
- *திருக்குறளைச் சித்திரமாகப்பேசும் நூல் & ஆசிரியர் - கலைஞர் மு. கருணாநிதியின் குறளோவியம்.*
- *திருக்குறளுக்கு மணக்குடவர், பரிதியார், பரிப்பொருள் கலிங்கர், பரிமேலழகரின் உரைகளைத் தொகுத்து தருமபுரம் ஆதீனம் - 'திருக்குறள் உரைக்கொத்து' என்னும் தொகுப்பை வெளியிட்டுள்ளது.*
- *திருக்குறளின் சிறப்பினைப் பல்வேறு புலவர்கள் புகழ்ந்து பாடியுள்ள நூலினைத் தொகுத்து - 'திருவள்ளுவமாலை' என்று அழைக்கின்றனர்.*
- *திருக்குறளுக்கு ஏற்ற கதைகளை சோமேசர் முதுமொழி வெண்பா என்னும் நீதிநூல் கூறுகிறது. இந்நூலாசிரியர் சிவஞான முனிவர்.*

## 10. மொழிபெயர்ப்பு

1. *உலகமொழிகள் பலவற்றிலும் மொழிபெயர்க்கப்பட்ட தலைசிறந்த நூல்*
2. *திராவிட இனமொழிகளில் எல்லாம் மொழிபெயர்க்கப் பட்டுள்ளது.*

3. வட இந்திய மொழிகளான மராத்தி, குஜராத்தி, பெங்காலி மொழிகளில் மொழிபெயர்க்கப்பட்டுள்ளது.

4. ஜி.யு. போப், எல்லிஸ்துரை, வ.வே.சு ஐயர் போன்றோர் மொழிபெயர்த்துள்ளனர்.

**'பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும்' (972)**
**'தன்நோய்க்குத் தானே மருந்து' (1102)**
**'மழித்தலும் நீட்டலும் வேண்டா'**
**'மங்கலம் என்ப மனைமாட்சி'**
**'அறிவு அற்றம் காக்கும் கருவி'**
**'அறத்தால் வருதே இன்பம்'**

என்பன போன்ற வாழ்வியல் விழுமியங்களைக் கூறும் கருத்துக்கள் மிகுதியாகக் காணப்படுகின்றன.

'திருக்குறள் தமிழின் முதலெழுத்தான' அகரத்தில் தொடங்கி இறுதியெழுத்தான 'ன' கரத்தில் முடிகின்றது.

**அகர முதல எழுதெல்லாம் ஆதி**
**பகவன் முதற்றே உலகு (1)**

**ஊடுதல் காமத்திற்குஇன்பம் அதற்கு இன்பம்**
**கூடி முயங்கப் பெறின் (1330)**

## 2. நாலடியார்

1. நாலடி + ஆர் = நாலடியார், நாலடி = நான்கு அடி, ஆர் = சிறப்பு விகுதியும் சேர்ந்து நாலடியார் என்றழைக்கப்படுகிறது.

2. 400 பாடல்கள் உடையது.

3. பாவகை - வெண்பா

4. நூலாசிரியர்கள் - சமண முனிவர்கள்

5. காலம் கி.பி. 7-ஆம் நூற்றாண்டுக்கு முன்னர்

6. தொகுத்தவர்: பதுமனார் (கடவுள் வாழ்த்து - பதுமனார்)

7. நாலடியார் பால், இயல், அதிகாரம் என்ற பகுப்பு முறையை உடையது.

8. இயல்கள்- 11, அறத்துப்பால் - 2, பொருட்பால் - 7, இன்பத்துப் பால்- 2

நூல் பிரிவு: மூன்று (அறம், பொருள், இன்பம்)

| | | |
|---|---|---|
| அறத்துப்பால் | - | (13 x 10 = 130) பாடல்கள் |
| பொருட்பால் | - | (26 x 10 = 260) பாடல்கள் |
| இன்பத்துப்பால் | - | (1 x 10 = 10) பாடல்கள் |
| 40 அதிகாரம் | - | 400 பாடல்கள் |

9. சிறப்புப்பெயர்கள்: 1) வேளாண்வேதம், 2) நாலடி நானூறு

## 10. நூல் சிறப்புகள்

1) 'நாலடி' என்றழைக்கப்படும் கீழ்க்கணக்கு நூல் நாலடியார் மட்டுமேயாகும்.

2) **"ஆலும் வேலும் பல்லுக்குறுதி**
**நாலும் இரண்டும் சொல்லுக்குறுதி"**

என்று திருக்குறளுக்கு அடுத்து பெருமை வாய்ந்த நூல்.

3) பழகு தமிழ்ச் சொல்லருமை நாலிரண்டில் என்றும் சிறப்பிக்கப் படுகிறது.

4) ஜி.யு. போப் இந்நூலை ஆங்கிலத்தில் மொழி பெயர்த்துள்ளார்.

5) பெருமுத்தரையர் பெரிது உவந்து ஈயும் என்ற வரிகளால் பெருமுத்தரையர் என்ற சிற்றரசர்களைப் பற்றிக் குறிப்பிடுகிறது.

6) நாலடியாரைத் 'தொகைநூல்' என்றழைக்கலாம்.

7) எட்டாயிரம் சமண முனிவர்கள் பாடிய பாடல்களைப் பாண்டிய மன்னனின் ஆணையால் வைகையாற்றில் வீசினர். அவற்றில் நானூறு பாடல்கள் நீரை எதிர்த்துக் கரை எறின. அந்த நானூறு பாடல்களே நாலடியார் என்றழைக்கப்படுகிறது.

8) இந்நூலில் அழகிற்குக் கூறும் விளக்கம், நடுவுநிலைமையால் சிறப்பிக்கப்படுகிறது.

**"குஞ்சி அழகும் கொடுத்தானைக் கோட்டழகும்**
**மஞ்சள் அழகும் அழகல்ல - நெஞ்சத்து**
**நல்லயாம் என்னும் நடுவுநிலைமையால்**
**கல்வி அழகே அழகு"**

என்ற பாடல் மூலம் விளக்கப்படுகிறது.

இந்நூலில்

**'நெல்லுக்கு உமியுண்டு: நீருக்கும் நுரையுண்டு'**
**"கல்வி கரையில; கற்பவர் நாள்சில"**

போன்ற அழகுச் சொற்றொடர்கள் பாடல்களில் சிறப்பாக வெளிப் படுகிறது.

## 3. நான்மணிக்கடிகை

நான்கு + மணி + கடிகை = நான்மணிக்கடிகை

1. கடிகை என்பது ஓர் அணிகலன். நான்கு விலை உயர்ந்த மணிகள் பதிக்கப்பெற்ற அணிகலன் போல நான்கு அரிய மணி போன்ற கருத்துக்களைத் தொகுத்துக்கூறும் நூல்.
2. 104 செய்யுள்கள் உடையது

   2 + 104 = கடவுள் வாழ்த்துப்பாடல்
3. இரண்டு கடவுள் வாழ்த்துப் பாடல்கள் உள்ளது.
4. வெண்பாவால் பாடப்பட்டது
5. 'விளம்பி' என்னும் ஊரைச் சார்ந்த நாகனார்.
6. கடவுள் வாழ்த்துப் பாடலில் திருமாலைப் புகழ்ந்து பாடுவதால் இவர் வைணவ சமயத்தைச் சார்ந்தவராக இருக்கலாம்.
7. காலம் கி.பி. நான்காம் நூற்றாண்டு என்பர்.
8. எக்குடியிலும் நல்லவர்கள் பிறக்கலாம் என்பதை

**"கள்ளி வயிற்றில் அகில் பிறக்கும் மான் வயிற்றில்**
**ஒள்ளரி தாரம் பிறக்கும் - பெருங்கடலுள்**
**பல்விலைய முத்தம் பிற்கும் - பெருங்கடலுள்**
**பல்விலைய முத்தம் பிறக்கும் அறிவார்யார்**
**நல்லாள் பிறக்கும் குடி"**

என்கிறார்.

9. வெல்வது வேண்டின் 'வெகுளி விடல்', 'அல்லவை செய் வோர்க்கு அறம் கூற்றம்', 'இந்நிலத்து மன்னுதல் வேண்டின் இசை நடுக' போன்ற அரியதொடர்கள் காணப்படுகின்றன.
10. பேராசிரியரும், நச்சினார்க்கினியரும் இந்நூல் 'அம்மை' என்னும் வனப்பைச் சார்ந்தது என்கிறார்கள்.

## 4. இன்னா - நாற்பது

1. 'இன்னா' - என்ற சொல்லுக்கு 'துன்பம்' என்று பொருள். ஒவ்வொரு பாட்டும் இன்ன இன்ன செயல்கள் துன்பம் தருவது என்று கூறுவதால் இந்நூல் இன்னா நாற்பது என்று பெயர் பெற்றது.
2. 40 செய்யுள்களை உடையது.

3. 40 + 1 : 41 ஒரு கடவுள் வாழ்த்துப்பாடல்

4. 164 இன்னாத செயல்களை எடுத்துக்கூறுகிறது.

5. வெண்பாவால் பாடப்பட்டது. (இன்னிசை வெண்பா)

6. அம்மை என்னும் வனப்பைச் சார்ந்தது இந்நூல்

7. காலம் கி.பி. 4-ஆம் நூற்றாண்டு என்பர்.

8. இந்நூலில்

**“பார்ப்பார் இல்கோழியும் நாயும் புகழ் இன்னா**
**ஆர்த்த மனைவி அடங்காமை நன்கு இன்னா**
**பாத்தில் புடவை உடையின்னா: ஆங்கு இன்னா**
**காப்பாற்றா வேந்தன் உலகு”**

என்பன போன்ற துன்பம் தரும் செயல்கள் கூறப்படுகிறது.

9. இந்நூலில்

**“உனைத் தின்று ஊனைப் பெருக்குதல் இன்னா”**
**“உண்ணாது வைக்கும் பெரும்பொருள் வைப்பினா”**
**“தீமையுடையார் அயலிருத்தல் இன்னா”**
**“அடைக்கலம் வவ்வுதல் இன்னா”**

போன்ற சிறந்த சொற்றொடர்கள் காணப்படுகிறது.

## 5. இனியவை நாற்பது

இனிய செயல்களை நாற்பது பாடல்களில் கூறும் நூலாதலால் இந்நூல் இனியவை நாற்பது என்றழைக்கப்படுகிறது.

1. 40 செய்யுள்களை உடையது.

2. 40 + 1 = 41 மும்மூர்த்திகளைத் தொழும் கடவுள் வாழ்த்தோடு 41 வெண்பாக்களை உடையது.

3. ஒவ்வொரு பாடலிலும் எந்தெந்த செயல்கள் இனியவை என்று எடுத்துக் கூறுவதால் இந்நூல் இனியவை நாற்பது என்றழைக்கப் படுகிறது.

4. வெண்பாவால் பாடப்பட்டது.

5. காலம் கி.பி. 5-ஆம் நூற்றாண்டு என்பர்.

6. இந்நூலாசிரியர் பூதஞ்சேந்தனார்.

7. இந்நூலில் 124 இனிய கருத்துக்கள் எடுத்துக் கூறப்பட்டுள்ளது.

8. 1, 3, 4, 5 ஆகிய நான்கு பாடல்களிலும் நான்கு இனிய கருத்தும் மீதமுள்ள பாடல்களில் மூன்று இனிய கருத்தும் இடம் பெறுகிறது.

9. இந்நூல் நூலமைப்பில் இன்னா நாற்பதுவையும், பொருள் அமைப்பில் திரிகடுகத்தையும் அடியொற்றியுள்ளது. கீழ்க்கணக்கு நூல்களில் பிரம்மன் வழிபாட்டைச் சொல்லும் முதல் நூல்.

10. இந்நூலில் வரும்

**“குழவி தளர்நடை காண்டல் இனிதே**
**அவர் மழலை கேட்டல் அமிழ்தின் இனிதே**
**குழவி பிணியின்றி வாழ்தல் இனிதே”**

என்ற பாடல் மக்கள் செல்வத்தின் மாண்பைச் சிறப்பித்தும் கூறும்.

11. **‘ஒப்ப முடிந்தால் மனை வாழ்க்கை முன்னினிது’**
**‘மானம் அழிந்தபின் வாழாமை காண்டலினிது’**
**‘குளவி தளர்நடை காண்டலினிதே’**
**‘வருவாயறிந்து வழங்கலினிதே’**

போன்ற அரிய இனிமையான சொற்றொடர்கள் இடம் பெறுகிறது.

## 6. திரிகடுகம்

திரி + கடுகம் = திரிகடுகம்

1. ‘திரி’ என்றால் மூன்று என்று பொருள். கடுகம் என்றால் காரமுள்ளப் பொருளாகும்.

2. சுக்கு, மிளகு, திப்பிலி ஆகிய மூன்றும் சேர்ந்த பொருளே திரிகடுகமாகும்.

3. இந்த திரிகடுகச் சூரணம் உடல்நோயைத் தீர்ப்பது போல் மக்களுக்கு நலம் பயக்கும் மூன்று உறுதிப் பொருள்களைப் பாடலில் எடுத்துச் சொல்வதால் இந்நூல் திரிகடுகம் என்றழைக்கப்படுகிறது.

4. 100 செய்யுள்களை உடையது.

5. 100 + 1 = 101 கடவுள் வாழ்த்துப்பாடல் திருமாலுக்குக் கடவுள் வாழ்த்துப்பாடல் பாடியதால் இந்நூலாசிரியர் வைணவராக இருத்தல் வேண்டும்.

6. இந்நூலாசிரியர் நல்லாதனார்.

திருநெல்வேலி மாவட்டத்தில் உள்ள ‘திருத்து’ என்னும் ஊரைச் சார்ந்தவர் என்பர்.

7. வெண்பாவால் பாடப்பட்டது.

8. இந்நூலின் காலம் கி.பி. 5-ஆம் நூற்றாண்டின் இறுதி என்பர்.

9. "அருந்ததிக் கற்பினார் தோளும் திருந்திய

**தொல்குடியின் மாண்டார் தொடர்ச்சியும் - சொல்லின்**
**அரில் அகற்றும் கேள்வியார் நட்பும் இம்மூன்றும்**
**திரிகடுகம் போலும் மருந்து"**

போன்ற சிறந்த பாடல்கள் நிரம்பக் காணப்படுகிறது.

10. இந்நூலில்

**'கண்ணுக்கு அணிகலன் கண்ணோட்டம்'**
**'நெஞ்சம் அடங்குதல் வீடாகும்'**
**'வருவாயுள் கால்வழங்கி வாழ்தல்'**
**'ஈதற்குச் செய்ய பொருளை'**

என்பன போன்ற அரிய தொடர்கள் இடம் பெறுகின்றன.

## 7. ஆசாரக்கோவை

1. 'ஆசாரம்' என்றால் ஒழுக்கம் என்று பொருள். தனிமனித வாழ்வின் ஒழுக்கங்களின் கோவையே ஆசாரக் கோவையாகும்.

2. 100 செய்யுள்களை உடையது.

3. 100 + 1 = 101 கடவுள் வாழ்த்தோடு 101 செய்யுள்களை உடையது.

4. வெண்பாவால் பாடப்பட்டது.

5. இந்நூலாசிரியர் பெருவாயின் முள்ளியார்

6. ஆசாரம் கூறும் முறை வடநூலை ஒத்துக் காணப்படுகிறது. வடமொழியில் 'இருடிகள்' கூறும் ஆசாரங்களைத் தொகுத்து தமிழில் மொழி பெயர்த்து இயற்றியிருக்கலாம் என்பதைச் சிறப்புப் பாயிரச் செய்யுள் விளக்குகிறது.

7. ஒழுக்கங்களை இருவகையாகப் பிரித்துக் கூறுகிறார் நூலாசிரியர்.

**1. ஏற்றுக் கொள்ளக்கூடிய ஒழுக்கம்:** நீராடுதல் / ஆடை அணிதல் / உணவு உண்ணும் முறை / உண்ணும் திசை / வாய்த்தூய்மை / நீர்பருகும் முறை, தூங்கும் முறை

**2. விலக்கக்கூடிய ஒழுக்கம்:** நின்று கிடந்து உணவு உண்ணாமை, எச்சிலுடன் செய்யத்தகாத செயல்கள், அந்திப் பொழுதில் செய்யக் கூடாத செயல்களைக் கூறுகிறது.

8. இந்நூல் காலம் கி.பி. 5-ஆம் நூற்றாண்டு என்பர்.

9. அறங்களையும், ஒழுக்கங்களையும் எடுத்துச் சொல்லும் போது 'முந்தையோர் கண்ட முறை, யாவரும் கண்ட நெறி' என்று அறிஞர்களின் அனுபவங்களையே தொகுத்துத்தருகிறது.

10. இந்நூல்

 "நன்றியறிதல் பொறையுடைமை இன்சொல்லோடு
 இன்னாத எவ்வுயிர்க்கும் செய்யாமை, கல்வியொடு
 ஒப்புரவாற்ற அறிதல், அறிவுடைமை
 நல்லினத் தாரோடு நட்டல் இவையெட்டும்
 சொல்லிய ஆசார வித்து"

என்ற பாடல் ஒழுக்கத்திற்கான வித்தை எடுத்துச் சொல்லும் பாடலாகும்.

11. கடவுள் வாழ்த்துப் பாடலில் சிவனை வணங்குவதால் இந்நூலாசிரியர் சைவ சமயத்தைச் சார்ந்தவராக இருக்கலாம்.

12. காலையில் துயில் எழுதல், காலைக்கடன் கழித்தல், நீராடல், உணவு உட்கொள்ளுதல், உறங்குதல் ஆகிய நடைமுறைகளின் பொழுது கடைப்பிடிக்க வேண்டிய ஒழுக்கவியல் நெறிமுறைகளை அழகுற எடுத்துக்கூறுகிறது.

13. சார்பு நூல் வகைக்கு இந்நூல் சிறந்த உதாரணம் என்கிறார். இலக்கண விளக்க உரையாசிரியர்.

## 8. ஏலாதி

1. ஏலம் - ஒரு பங்கு, இலவங்கம் - இரண்டு பங்கு, (சிறுநாவற்பூ) நாககேசரம் - 3பங்கு, மிளகு - நான்கு பங்கு, திப்பிலி - ஐந்து பங்கு, சுக்கு - ஆறு பங்கு என்ற விகிதத்தில் கலந்து செய்வது ஏலாதி சூரணமாகும். அதுபோல ஒவ்வொரு செய்யுளிலும் ஆறு அரிய அறக் கருத்துக்களைக் கொண்டது ஏலாதியாகும்.

2. 80 செய்யுட்களை உடையது.

3. 80 + 2 = 82 (சிறப்புப் பாயிரச் செய்யுள் -2)

4. வெண்பாவால் பாடப்பட்டது

5. இந்நூலாசிரியர் கணிமேதாவியார்

6. இவர் மதுரைத் தமிழாசிரியர் மாக்காயனாரின் மாணாக்கர்

7. அருகனுக்கு வணக்கம் சொல்வதால் இவர் சமணசமயத்தைச் சார்ந்தவராக இருக்கலாம்.

8. ஒன்பது - என்ற சொல்லைத் ‘தொண்டு’ என்றே பயன்படுத்து கிறார்.

9. இந்நூலில் வரும்

**“இடை வனப்பும் தோள் வனப்பும் ஈடின் வனப்பும்**
**நடை வனப்பும் நாணின் வனப்பும் - புடைசால்**
**கழுத்தின் வனப்பும் வனப்பல்ல எண்ணோடு**
**எழுத்தின் வனப்பே வனப்பு”**

என்னும் பாடல் சிறப்புமிக்கதாகும்.

10. இந்நூல் கி.பி. 5-ஆம் நூற்றாண்டைச் சார்ந்தது என்பர்.

11. உடலின் அறுவகைத் தொழிலையும் நூலாசிரியர் “எடுத்தல், முடக்கல், நிமிர்தல், நிலைத்தல், படுத்தல், ஆடல் என வரிசைப் படுத்துகிறார்.

## 9. சிறுபஞ்சமூலம்

1. கண்டங்கத்திரிவேர், சிறுமல்லிவேர், பெருமல்லிவேர், சிறுவழு துணைவேர், நெருஞ்சிவேர் ஆகிய ஐந்தும் சேர்ந்து செய்யப் பட்டக் கலவை உடற்பிணியை நீக்குவது போல் மக்களின் உயிர்ப் பிணியாகிய அறியாமையைப்போக்கி வாழ்க்கை ஈடேற்றத்திற்கு உதவும் அரிய ஐந்து கருத்துக்களை ஒவ்வொரு பாடலிலும் எடுத்துச் சொல்வதால் இந்நூல். சிறுபஞ்சமூலம் எனப்பெயர் பெற்றது.

2. 102 வெண்பாக்களை உடையது.

3. 100 + 2 = 102 (சிறப்புப்பாயிரப்பாடல் இரண்டு)

4. இந்நூலாசிரியர் காரியாசான்

5. இவர் மதுரைத் தமிழாசிரியர் மாக்காயனாரின் மாணவர்

6. காரியாசனும், கணிமேதாவியாரும் ஒரு சாலை மாணாக்கர்கள்.

7. கி.பி. 470-இல் வச்சிர நந்தி - அமைத்தத் தமிழ்ச்சங்கத்தில் கல்வி பயின்றவர்கள் ~ பயிற்றுவித்தவர்கள் இவ்விருவரும்.

8. காலம் கி.பி. 5-ஆம் நூற்றாண்டு என்பர்.

9. சமயம் : சமணம்

10. இந்நூலில் கல்வியாளர்களால் செய்ய முடியாத அரிய செயல் வான் குருவிக் கூடு, எறும்புப்புற்று, பட்டுப்புழு கூடு, தேனடை, கோல்புழுக் கூடு போன்றவையாகும்.

11. இந்த உலகத்தில் நிலைத்த அழகைப் பற்றிக்கூறும் பாடல் கவித்துவமானது.

“மயிர்வனப்பும் கண்கவரும் மார்பின் வனப்பும்
உகிர் வனப்பும் காதின் வனப்பும் - செயிர்தீர்த்த
பல்லின் வனப்பும் வனப்பல்ல நூற்கு அமைந்த
சொல்லின் வனப்பே வனப்பு”

## 10) பழமொழி நானூறு

1. ஒவ்வொரு பாடலின் இறுதியிலும் ஒரு பழமொழி இடம் பெறுமாறு பாடப்பட்ட நானூறு பாடல்களின் தொகுப்பே பழமொழி நானூறு ஆகும். ஒவ்வொரு பாடலிலும் ஒரு கதையோ, வரலாற்று நிகழ்வோ எடுத்துச் செல்லப்பட்டு பாடலின் இறுதியில் ஒரு பழமொழி மூலம் நீதிக் கருத்துக்கள் சுட்டப்படும். முதல் மூன்று அடிகளில் கதையோ, வரலாறோ இடம் பெறும். நான்காம் அடியில் பழமொழி இடம் பெறும்.
2. பாடல்களின் எண்ணிக்கை: 400
3. பாவகை: வெண்பா
4. நூலாசிரியர்: முன்றுறையரையனார்
5. நூல்பகுப்பு: பெரும்பிரிவு ஐந்து, சிறுபிரிவுகள் 35
6. காலம்: கி.பி. 5-ஆம் நூற்றாண்டு
7. நூலில் இடம் பெறும் மன்னர்கள்: கரிகாலன், மனுநீதிச் சோழன், கொற்கைப்பாண்டியன், பாரி பேகன் போன்றவர்கள்
8. சமயம்: அருகக் கடவுளே வாழ்த்தியதால் சமண சமயத்தைச் சார்ந்தவர் என்பர்.

### நூல் பிரிவு

முதல் பிரிவு - கல்வி ஒழுக்கம், புகழ் பற்றி வரும் - 9 இயல்கள்

இரண்டாம் பிரிவு - சான்றோர்கள், நட்பு பற்றி வரும் - 7 இயல்கள்

மூன்றாம் பிரிவு - முயற்சி, பொருள் பற்றி வரும் - 8 இயல்கள்

நான்காம் பிரிவு - அரசர், அமைச்சர், படை பற்றி வரும் - 6 இயல்கள்

ஐந்தாம் பிரிவு - இல்வாழ்க்கை, உறவினர், வீட்டுநெறி பற்றி வரும் - 4 இயல்கள்

## நூல் சிறப்புகள்

1. பதினெண் கீழ்க்கணக்கில் முப்பெரும் அறநூல்களில் பழமொழியும் ஒன்றாகும்.
2. பழமொழிகளை நூல் முழுவதும் அமைத்து எழுதப்பட்ட நூல்.
3. உலக வழக்கு, இலக்கிய வழக்கு பழமொழிகள் இந்நூல் முழுவதும் காணப்படுகின்றன.

| பழமொழிகள் | வகை |
|---|---|
| 1. குன்றின் மேல் இட்ட விளக்கு<br>2. பாம்பறியும் பாம்பின் கால்<br>3. நிறைகுடம் நீர் தளும்பல் இல்<br>4. திங்களை நாய் குரைத்தற்று<br>5. நாய்பெற்ற தெங்கம்பழம் | → உலக வழக்குப் பழமொழிகள் |
| 1. கற்றலின் கேட்டலே நன்று<br>2. குலவிச்சை கல்லாமல் பாகம்படும்<br>3. ஞாயிற்றைக் கைமறைப்பார் இல்<br>4. யானையால் யானை யாத்தற்று<br>5. நுணலும் வாயில் கெடும் | → இலக்கிய வழக்குப் பழமொழிகள் |

6. மனுநீதிச் சோழன் தன் மகனைத் தேர்க்காலில் இட்டது. கரிகாலன் நரைமுடி தரித்து நீதி சொன்ன வரலாறு, பாலை கௌதமனாருக்கு பல்யானைச் செல்கெழு குட்டுவன் வீடு அளித்தது போன்ற வரலாற்று குறிப்புக்கள் இடம் பெறுகிறது.
7. பாரி முல்லைக்குத் தேர் கொடுத்து, பாரி மகளிரின் கொடைச் சிறப்பு, பேகன் மயிலுக்குப் போர்வை கொடுத்தன போன்ற நிகழ்வு களும் குறிப்பிடப்பட்டுள்ளன.
8. பேதைகள் தன் வாய்ச் சொல்லாலே தனக்குத் தீங்கிழைத்துக் கொள்ளுவதை,

**“பொல்லாத சொல்லி மறைந்தொழுகும் பேதைதன்**
**சொல்லாலே தன்னைத் துயர்படுத்தும் - நல்லாய்**
**மணலுள் முழுகி மறைந்து கிடக்கும்**
**நுணலுந்தன் வாயால் கெடும்”**

என்ற பழமொழியால் அழகுற விளக்குகிறார்.

9. தமக்கு மருத்துவர் தாம், தொட்டாரை ஒட்டாப் - பொருளில்லை. முதலிலார்க் கூதியமில் போன்ற மிகச்சிறந்த பழமொழிகள் இன்றும் வழக்கில் உள்ள அழகிய பழமொழிகள்.

10. இந்நூலாசிரியரே 'பண்டைப்பழமொழி' என்பதால் வழக்கில் இருந்த பண்டை தமிழகத்தில் பழமொழிகளையே நூலில் கையாண்டுள்ளார்.

11. தொல்காப்பியர் பழமொழியை 'முதுசொல், முதுமொழி' என்றே குறிப்பிடுகிறார்.

12. பதிப்பித்தவர்: செல்வக் கேசவராய முதலியார்.

## 11. முதுமொழிக்காஞ்சி

1. முதுமொழி என்பது அனுபவச்சொல், காஞ்சி என்பது மகளிர் இடையில் அணியும் மணிக்கோவையாகும். அதுபோல முதுமொழிகள் பல கோர்க்கப்பட்ட நூல் இது.

2. நிலையாமையைப் பற்றிய காஞ்சித் திணையில் 'முதுமொழிக் காஞ்சி' - ஒரு துறையாகும்.

3. உலக நிலையாமையை எடுத்துக்காட்டிச் சான்றோர்கள் அறிவுடைமையால் கூறும் அனுபவ உரைகளே முதுமொழிக் காஞ்சி யாகும்.

4. துறைபெயரைத் தாங்கிய நீதிநூல் முதுமொழிக்காஞ்சி மட்டுமேயாகும்.

5. இந்நூலாசிரியர் மதுரைக் கூடலூர்கிழார்

6. 100 வெண்பாக்களை உடையது. (குறள் தாழிசை)

7. அதிகாரத்திற்குப் பத்துப் பாடல்கள் வீதம் 100 குறட்டாழிசை செய்யுள்களை உடையது.

8. ஒவ்வொரு பத்துப் பாடல்களுக்கும் ஒவ்வொரு சிறந்த தலைப்பிட்டு இடப்பட்டிருக்கிறது.

அப்பெயர்கள்

1. சிறந்த பத்து
2. அறிவுப்பத்து
3. பழியாப்பத்து
4. துவ்வாப்பத்து
5. அல்ல பத்து

6. இல்லைப்பத்து
7. பொய்ப்பத்து
8. எளியபத்து
9. நல்கூர்ந்த பத்து
10. தண்டாப்பத்து

என அமையும்.

8. ஒவ்வொரு பத்துப்பாடல்களின் தொகுப்பும் "ஆர்கலி உலகத்து மக்கட்கெல்லாம்" எனத் தொடங்கும்.

9. காலம் கி.பி. ஐந்தாம் நூற்றாண்டு என்பர்.

10. அம்மை என்னும் வனப்பைச் சார்ந்து.

11. சுருங்கச் சொல்லி விளங்க வைக்கும் ஆத்திசூடி நூற்களுக்கு இந்நூலே முன்னோடி நூலாகும்.

12. "இளமையில் சிறந்தன்று மெய்பிணியின்மை" (சிறந்தபத்து - 5)

ஈரம் உடைமை ஈகையின் அறிப - அறிவுப்பத்து - 2

### அகப்பொருள் நூல்கள்

பதினெண்கீழ்க்கணக்கு நூல்களில் அகம் சார்ந்த நூல்கள் ஆறு ஆகும். அவை.

1. கார்நாற்பது
2. திணைமொழி ஐம்பது
3. திணைமாலை நூற்றைம்பது
4. ஐந்திணை எழுபது
5. ஐந்திணை ஐம்பது
6. கைந்நிலை

### 1. கார்நாற்பது

திணை : அகத்திணை

1. முல்லைத் திணைக்குரிய ஆற்றியிருக்கும் ஒழுக்கத்தினைக் கூறும் நூலாகும்.

2. 40 வெண்பாக்களை உடையது.

3. முல்லைத் திணையின் பெரும்பொழுதான கார்காலம் ஒவ்வொரு பாடலிலும் சிறப்பித்துப் பாடப்படுவதால் இந்நூல் கார்நாற்பது என்றழைக்கப்படுகிறது.

4. அரசன் பொருட்டுப் போர்க்களம் பிரிந்த தலைவனின் பிரிவை எண்ணி தலைவி வருந்துதல் - தோழி தலைவிக்கு ஆறுதல் மொழி கூறுவது - தலைவன் தன் உள்ளத்து உணர்வுகளைத் தேர்ப்பாகனிடம் வெளிப்படுத்துவது போன்றவை இப்பாடல்களில் வெளிப்படும்.
5. சிவபெருமானுக்காகப் பண்டைய தமிழர்கள் கொண்டாடிய கார்த்திகைத் திருவிழா பற்றியும் இந்நூல் எடுத்துக்கூறுகிறது.
6. இந்நூலாசிரியர் மதுரைக் கண்ணன் கூத்தனார்.
7. காலம் கி.பி. 5-ஆம் நூற்றாண்டு.
8. கீழ்க்கணக்கு அகநூல்களுள் சிறிய நூல் இது.
9. இடம்பெறும் அகத்துறை: வீனை மீளும் தலைவன் தேர்ப்பாகனுக்கு உரைத்தல்
10. சமயம்: வைணவம்.

## 2. திணைமொழி ஐம்பது

1. ஐந்திணைகளைப் பற்றிய 50 பாடல்களை உடையது.
2. திணைக்குப் பத்துப் பாடல்கள் வீதம் ஐம்பது பாடல்களைக் கொண்ட நூல்.
3. இந்நூலாசிரியர் கண்ணன் சேந்தனார்.
4. திணை: ஐந்திணைகளும்
5. திணை வைப்புமுறை: குறிஞ்சி - பாலை - முல்லை - மருதம் - நெய்தல் என்ற வரிசையில் பாடப்பட்டுள்ளது.
6. பாவகை: வெண்பா (நேரிசை வெண்பா - 4 பாடல்கள், இன்னிசை வெண்பா - 46 பாடல்கள்)
7. காலம்: கி.பி. 5-ஆம் நூற்றாண்டு
8. மலர்ச்சோலையில் தலைவியைக் காணும் தலைவன்

“மயில்கொல் மடவாள்கொல் மாநீர்த் திரையுள்
பயில்வதோர் தெய்வம் கொல்”

என்ற பாடல் வரிகள் திருக்குறளின் பாடல் சாயலில் பாடப்பட்டுள்ளது.

## 3. திணைமாலை நூற்றைம்பது

1. ஐந்திணைகளைப் பற்றிய 150 பாடல்களை உடையது.
2. பதினெண் கீழ்க்கணக்கிலுள்ள அகநூல்களுள் பெரியநூல் இதுவாகும்.

3. ஒவ்வொரு திணைக்கும் (5 ஒ 30 = 150) முப்பது பாடல் வீதம் 150 பாடல்களை உடையது.

4. அகத்திணை ஒழுக்கங்களை வரிசைப்படுத்தி மாலை போல தொகுத்துக் கூறியதால் இந்நூல் திணைமாலை நூற்றைம்பது என அழைக்கப்படுகிறது.

5. இந்நூலாசிரியர் கணிமேதாவியார்.

6. திணை: ஐந்திணைகளும்

7. திணைவைப்பு முறை: குறிஞ்சி - நெய்தல் - பாலை - முல்லை - மருதம் என்ற வரிசையில் பாடப்பட்டுள்ளது.

8. பாவகை: வெண்பா (குறட்டாழிசை)

9. காலம்: கி.பி. 5-ஆம் நூற்றாண்டு

10. கலித்தொகையைப் போல் 150 பாடல்களைக் கொண்டது.

11. இந்நூலில் கடவுள் வாழ்த்துப்பாடல் காணப்படவில்லை.

12. இருப்பினும் பாயிரச் செய்யுள் காணப்படுகிறது.

13. தலைவியின் முகம் திங்களைப் போன்று இருக்கிறது என்ற பாடல் இலக்கிய இன்பம் மிக்கப்பாடலாகும்.

**“திங்களுள் வில்எழுதித் தேராதுவில் விலகித்**
**தங்கள் உளானென்றும் தாழ்வினால் - இங்கண்”**

என்ற பாடலில் தலைவியின் இரு புருவங்கள் வில்லைப் போன்றும், கண்கள் நிலவைப் போன்றும் வரையப்பட்டுள்ளன என்று விளக்குகிறது.

## 4. ஐந்திணைஐம்பது

1. ஐந்திணைகள் பற்றிய 50 பாடல்களை உடையது.

2. 5 ஒ 10 = 50 திணைக்குப் பத்துப்பாடல்கள் வீதம் 50 பாடல் களைக் கொண்டது.

3. ஆசிரியர்: மாறன் பொறையனார்

4. திணை: ஐந்திணைகளும்

5. திணைவைப்பு முறை: முல்லை, குறிஞ்சி, மருதம், பாலை, நெய்தல் என்ற வரிசையில் பாடப்பட்டுள்ளது.

6. பாவகை: வெண்பா

7. காலம்: கி.பி. 4-ஆம் நூற்றாண்டு என்பர்.

8. இந்நூலின் பாயிரச் செய்யுள் "இதனை ஓதாதவர் செந்தமிழ் சேராதார்" என்கிறது.

9. அன்பின் மகத்துவத்தை, அழகியலை எடுத்துச் சொல்லும் பாடல் கவித்துவமிக்கது.

**"சுனைவாய்ச் சிறுநீரை எய்யா தென்றெண்ணிப்**
**பிணைமான் இனிதுண்ண வேண்டிக் - கலைமாத்தன்**
**கள்ளத்தின் ஊச்சும் சுரமென்பர் - காதலர்**
**உள்ளம் படர்ந்த நெறி"**

10. திணைக்குப் பத்துப் பாடல்வீதம் பாடும் ஐங்குறுநூற்றின் தாக்கம் இந்நூலில் வெளிப்படுகிறது.

11. தொல்காப்பிய நூற்பா சொல்லாத பாலைத்திணையை மருதத் திணைக்கு அடுத்துக் கூறுகிறார் மாறன் பொறையனார்.

## 5. ஐந்திணை எழுபது

1. ஐந்திணைகள் பற்றிய 70 பாடல்களைக் கொண்டநூல்.

2. 5 ஒ 14: திணைக்குப் பதினான்கு பாடல்கள் வீதம் 70 பாடல் களைக் கொண்டது.

3. நூலாசிரியர்: மூவாதியார்

4. திணை: ஐந்திணைகள்

5. திணைவைப்புமுறை: குறிஞ்சி - முல்லை - பாலை - மருதம் - நெய்தல்

6. பாவகை: வெண்பா

7. காலம்: கி.பி. 5-ஆம் நூற்றாண்டு

8. கடவுள் வாழ்த்துப்பாடல்: விநாயகர் வணக்கம். இப்பாடலைப் பிற்காலச் சேர்க்கை என்பர்.

9. பருவம் கண்டு வருந்தும் காதலியின் நிலையினை

**"புல்லுநர் இல்லார் நடுங்கச் சிறுமாலை**
**கொல்லுநர் போல வரும்"**

என்ற பாடல் இலக்கிய நயமிக்கப்பாடலாகும்.

10. நடுகல் வழிபாடு, குழந்தைகளுக்கு ஐம்படைத்தாலி அணிவித்தல், நிமித்தம், மணமகள் மணமகளிடமிருந்து உறுதிப்பத்திரம் எழுதி வாங்கியது பற்றியக் குறிப்புகள் காணப்படுகிறது.

### 6. கைந்நிலை

1. ஐந்திணைகள் பற்றிய 60 பாடல்களை உடைய நூல்.
2. 5 ஒ 12 = 60 (திணைக்கு 12 பாடல்கள் வீதம் பாடப்பட்டுள்ளது.
3. நூலாசிரியர்: புல்லங்காடனார்
4. காலம்: கி.பி. 5-ஆம் நூற்றாண்டு
5. திணை: ஐந்திணைகள்
6. திணைவைப்புமுறை: குறிஞ்சி, பாலை, முல்லை, மருதம், நெய்தல்
7. பாவகை: வெண்பா
8. கை + நிலை: கைந்நிலை

கை = ஒழுக்கம்: நிலை: தன்மை: ஐந்திணைகளின் ஒழுக்க நிலையினை எடுத்துக்கூறும் நூல்.

### 7. புறப்பொருள் சார்ந்த நூல்

களவழி நாற்பது

1. களம்: போர்க்களம். போர்க்களம் பற்றிய 40 பாடல்களைக் கொண்ட நூல்.
2. பதினெண்கீழ்க்கணக்கில் புறம் சார்ந்த ஒரே நூல்
3. நூலாசிரியர்: பொய்கையார்
4. பாடல்கள்: 40 பாடல்கள்
5. திணை: புறத்திணை - வாகைத்திணை
6. பாவகை: வெண்பா
7. காலம் கி.பி. 5-ஆம் நூற்றாண்டு

### 8. நூற்சிறப்பு

1. யானைப் போர் பற்றியே அதிகம் பாடல்கள் காணப்படுகிறது.
2. பிற்காலத்தில் தோன்றிய பரணி நூலுக்கு இந்நூலே தோற்றுவாயாகும்.
3. அம்மை என்னும் வனப்பைச் சார்ந்த நூல்.
4. கார்த்திகை தீபவிழா பற்றிய குறிப்பு கார்த்திகைச் சாற்றில் கழி விளக்கை என்ற பாடல் வரியால் புலப்படுகிறது.

## 9. நூல்தோற்றம்

*கழுமலம் என்னும் இடத்தில் சேரமான்கணைக்கால் இரும்பொறை பேரில் தோற்றத்தால் சோழன் செங்கணான் குடவாயிற் கோட்டத்தில் சிறைவைத்தான் இதை கேள்விப்பட்ட சேரனின் உயிர் நண்பர் சோழனைப் புகழ்ந்து பாடி சேரனை சிறைமீட்பதற்காகப் பாடப்பட்ட நூல் இதுவாகும்...*

10. *போர்க்களத்தில் யானையின் வெட்டப்பட்ட துதிக்கையில் இருந்து குருதி கொட்டுவது ஒரு பையில் இருந்து பவளம் கொட்டுவது போல் இருந்தது என்ற உவமையால் விளக்குகிறார் பொய்கையார்.*

**"கவளம்கொள் யானையின் கைகள் துணிக்க**
**பவளம் சொரிதரு பைபோல் திவன்ஒளிய**
**ஒன்செங் குருதி உமிழும் புனல் நாடன்**
**கொங்கரை அட்ட களத்து"**

*என்ற பாடலின் மூலம் விளக்குகிறார். இந்தப் பாடலின் மூலம் கொங்கர்களும் சேரமானுக்குத் துணையாகப் போர்புரிந்தனர் என்ற வரலாற்றுச் செய்தியும் தெரிய வருகிறது.*

# 3. காப்பிய இலக்கியம்

*காப்பியம் என்பது காவியமென்ற வடசொல்லில் இருந்து பெறப் பட்டது. 'கவி' என்கின்ற சொல்லிலிருந்து காவியம் என்ற சொல் பிறந்தது. 'காவியம்' என்ற சொல்லிலிருந்து 'காப்பியம்' என்ற சொல் பிறந்தது. பொருளால் தொடர்ந்து வரும் செய்யுள் இலக்கியத்தைப் பெருங்காப்பியம் என்றழைத்தனர். காப்பியங்கள் ஒரு மொழியின் சிறப்புக்களையும், தொன்மையினையும் புலப்படுத்துவதாகும். தொல்காப்பியர் காலத்திற்கு முன்பே பல காப்பியங்கள் தமிழில் எழுந்திருக்க வேண்டும். தமிழில் 'காப்பியம்' என்ற சொல் வழக்கில் இருந்ததையும் சில அறிஞர்கள் அறுதியிட்டுக் கூறுகின்றனர். சங்க இலக்கிய ஆசிரியர்களான "பல் காப்பியனார், காப்பியாற்றுக் காப்பியனார்" போன்ற பெயர்களில் இருந்து "காப்பியம்" என்ற சொல் தமிழில் ஊர்ப் பெயராகவும், குடிப்பெயராகவும் வழக்கில் இருந்துள்ளதை அறியலாம். "காப்பியாறு, காப்பியக்குடி" என்ற சொற்கள் தமிழில் வழக்கில் இருந்து வந்துள்ளது.*

*காப்பியத்தைக் காப்பு + இயம் எனப் பிரித்துத் தமிழ் சொல்லாகவும் கருதுவர்.*

## காப்பிய இலக்கணம்

*தண்டியலங்காரம் காப்பியத்திற்கான இலக்கணத்தைக் கூறுகிறது.*

1. *காப்பியம் வாழ்த்து, வணக்கம், வரு பொருள் உரைத்தல் என்ற மூன்றினுள் எவையேனும் ஒன்றினைப் பெற்றிருக்க வேண்டும்.*
2. *அறம், பொருள், இன்பம், வீடு என்ற நான்கு உறுதிப் பொருள் களையும் கொண்டிருக்க வேண்டும்.*
3. *காப்பியத்தின் தலைவன் தன்னிகரில்லாத் தலைவனாக விளங்க வேண்டும் (அல்லது) ஒப்பாரும், மிக்காரும் மிக்கத் தலைவனாக விளங்க வேண்டும்.*
4. *பல்வேறு கிளைக் கதைகளைக் கொண்டிருக்க வேண்டும்.*
5. *பெரும் பிரிவுகள் காண்டம் என்றோ, காதைகள் என்றோ, இருத்தல் வேண்டும். சிறு பிரிவுகள் இலம்பகம், சருக்கம், படலம் என்றிருத்தல் வேண்டும்.*

6. நாட்டு வருணனைகள், மலை, கடல், நகர், ஞாயிறு, திங்கள் இவற்றின் வருணனைகள் இடம் பெறவேண்டும்.
7. திருமணம், முடிசூடல் போன்ற நிகழ்வுகளும், போர்ச் செயல்கள், எண்வகைச் சுவைகளும், மெய்ப்பாடுகளும் கொண்டதாக அமைதல் வேண்டும்.

## 1. ஐம்பெரும் காப்பியங்கள்

ஐம்பெரும் காப்பியம் என்னும் சொல் வழக்கு பிற்காலத்தில் தோன்றியதாகும். ஐம்பெருங் காப்பியங்களின் வரிசை முறைக்கு காரணங்கள் என்று எதுவுமில்லை. “ஐம்பெரும் காப்பியம்” என்ற சொல்லை நன்னூலாசிரியரான மயிலைநாதர் தான் முதன் முதலில் குறிப்பிடுகிறார். தமிழ்விடுதூது என்ற நூல் வடமொழி மரபைப் பின்பற்றி “கற்றார் வழங்கும் பஞ்ச காவியம்” என்ற சொல்லாட்சியை எடுத்தாள்கிறது. 19ஆம் நூற்றாண்டைச் சார்ந்த கந்தப்ப தேசிகரே ஐம்பெருங் காப்பியங்கள் எவை என்பதை விளக்குமாறு ஒரு பாடலில்

**“சிந்தா மணி யாம் சிலப்பதிகாரம் படைத்தான்**
**நத்தா மணி மேகலை புனைந்தான் - நந்தா**
**வளையாபதி தருவான் வாசவனுக் கீந்தான்**
**திளையாத குண்டல கேசிக்கும்”**

என்று கூறுகிறார். தமிழில் மிகச் சிறந்தக் காப்பியங்களான சூளாமணியையும், பெருங்கதையையும் விட்டுவிட்டு வளையாபதியையும், குண்டலகேசியையும் ஐம்பெருங்காப்பியங்களில் சேர்த்தது பொருந்தாது என்கிறார்கள் இக்காலத்து ஆராய்ச்சியாளர்கள்.

1. சிலப்பதிகாரம்
2. மணிமேகலை
3. சீவகசிந்தாமணி
4. வளையாபதி
5. குண்டலகேசி

### 1. சிலம்பு - நூல் எழுந்த வரலாறு

சேரன் செங்குட்டுவன் மலைவளம் காணச்சென்ற போது குன்றக் குறவர்கள் ஒன்றுகூடி, காதல் கணவனான கோவலனோடு கண்ணகி விண்ணகம் சென்ற காட்சியை எடுத்துக்கூறினர். அப்பொழுது மன்னனின் அருகில் இருந்த சீத்தலைச் சாத்தனார், கோவலனுக்கும், கண்ணகிக்கும், பாண்டிய மன்னன் நெடுஞ்செழியனுக்கும், கோப்பெருந்

*தேவிக்கும் சிலம்பு காரணமாக நடந்த நிகழ்ச்சியினை எடுத்துக்கூறினார். இந்தக் கதையினை சேரன் செங்குட்டுவனின் இளவலான இளங்கோவடிகளைச் செய்யுள் இயற்றுமாறு பணிக்க*

**"முடிகெழு வேந்தர் மூவர்க்கும் உரியது**
**அடிகள் நீரே அருளுக"**

*என்று வேண்டுகோளின்படி சிலப்பதிகாரக் கதையைப் பாடியதாக, சிலப்பதிகாரம் கூறுகிறது.*

### மூன்று உண்மைகள்

*மனித வாழ்க்கையை இயக்கும் மூன்று உண்மையினையுடைய கதை இதுவாகும் என்ற இளங்கோவடிகள்,*

**"அரசியல் பிழைத்தோர்க்கு அறங்கூற்றாவதூஉம்**
**உரைசால் பத்தினியை உயர்ந்தோர் ஏத்துதலும்**
**ஊழ்வினை உருத்துவந் தூட்டும் என்பதூஉம்"**

*ஆகிய உண்மைகளை எடுத்துச் சொல்ல இக்காப்பியம் இயற்றப் பட்டது.*

### காலம்

*வையாபுரிப்பிள்ளை: எட்டாம் நூற்றாண்டு என்கிறார்.*
*பிற அறிஞர்கள்: கி.பி. இரண்டாம் நூற்றாண்டு என்பர்.*

## நூல் அமைப்பு முறை

*பண்டைய தமிழகத்தை ஆண்ட சேர, சோழ, பாண்டியர்களையும் பாடுகின்ற இக்காப்பியம், அந்த மன்னர்களின் தலைநகரங்களின் பெயராலேயே மூன்று காண்டங்கள் என்ற பிரிவுகளை உடையது. புகார்க்காண்டம், மதுரைக்காண்டம், வஞ்சிக்காண்டம் என்ற காண்டங்களை உடையது.*

### 1. புகார்க் காண்டம்

*மங்கல வாழ்த்துப் பாடல் தொடங்கி நாடுகாண் காதை முடிய 10 காதைகளை, உடையது.*

### 2. மதுரைக்காண்டம்

*காடுகாண் காதை தொடங்கி கட்டுரைக் காதை முடிய 13 காதைகளை, உடையது.*

### 3. வஞ்சிக்காண்டம்

*குன்றக்குரவை முதல் வரம் தருகாதை முடிய 7 காதைகளை உடையது*

**சமயம்: சமணசமயம்**

## நூல் ஆசிரியர்

*இளங்கோவடிகள் "கோ" என்றால் அரசன். "இளங்கோ" என்பது அரசனின் இளவல் என்று பொருள்.*

## நூல் தொடக்கம்

*'திங்களைப் போற்றுதும் திங்களைப் போற்றுதும்' என்று தொடங்குகிறது.*

*இந்நூல் 5001 அடிகளைக் கொண்டது.*

## நூல் அரங்கேற்றம்

*இளங்கோ அடிகள் சாத்தனார் கேட்க இந்நூலைப் பாடினார்.*

*தெய்வங்களை வாழ்த்தி விட்டு நூலினைத் தொடங்கும் மரபினை மாற்றி, முதன் முதலாக இயற்கையை வாழ்த்தி கடவுள் வாழ்த்துப் பாடியவர் இளங்கோவடிகள் மட்டுமே. சிலம்பின் தொடக்கத்தில்,*

"திங்களைப் போற்றதும், திங்களைப் போற்றதும்
கொங்கலதார்ச் சென்னி குளிர் வெண்கொடை போன்றிவ்
அங்கண் உலகளித் தலான்" என்றும்
"ஞாயிறு போற்றுதும்; ஞாயிறு போற்றுதும்"
"மாமழை போற்றதும்; மாமழை போற்றுதும்"
"பூம்புகார் போற்றுதும்; பூம்புகார் போற்றுதும்"

*எனப் பாடுகிறார்.*

## சிலப்பதிகாரம் கதைச்சுருக்கம்

*மங்கல வாழ்த்துக் காதையில், பூம்புகாரின் பெரு வணிககுலத்தில் பிறந்த மாசாத்துவான் மகனான கோவலனுக்கும், மாநாய்கன் மகளான கண்ணகிக்கும் மாநகரே வாழ்த்தத் திருமணம் நடைபெறுகின்றது. பின்னர் மாமலர் போன்ற நீண்ட நெடுங் கண்ணினை உடைய மாதவி மேல் மையலுற்று கண்ணகியைத் துறந்து மாதவியோடு வாழ்க்கையை நடத்துகிறான் கோவலன்.*

*வாழ்க்கை மகிழ்வோடு நடந்து கொண்டிருக்கும் போது, பூம்புகாரில் நடைபெற்ற இந்திர விழாவில் மாதவி ஆடிய நடனமும், அவள் பாடிய கானல் வரிப் பாடலிலும் ஊழ்வினை வந்து உருத்த மாதவியைத் தவறாக எண்ணியக் கோவலன், அவளை வெறுத்து கண்ணகியோடு சேர்ந்து வாழ்கிறான். கண்ணகியிடம் எஞ்சியிருந்த சிலம்பினைக் கொண்டு வாழ வழிதேடி புகார் நகரை விட்டு மதுரைக்கு வருகிறான். இது புகார்க் காண்டமாகும்.*

*மதுரை வந்த கண்ணகியையும், கோவலனையும் கவுந்தியடிகள் இடையர் குலப்பெண்ணான மாதிரியிடம் அடைக்கலமாகக் கொடுத்த பின்பு, மாதிரியின் வீட்டில் தங்கியிருந்த கோவலன் சிலம்பு விற்கச் சென்ற இடத்தில் பொற்கொல்லனால் கள்வன் என குற்றம் சாற்றப்பட்டு கொலை செய்யப்படுகிறான் கோவலன். கண்ணகி பொங்கியெழுகிறாள். அடங்கா கோபம் கொண்டு, பாண்டிய அரச சபை முன்னே என் கால் சிலம்பிலுள்ள பரல் மாணிக்கப்பரல் என்ற வாதத்தை முன் வைத்து, நீதியை நிலை நாட்டுகிறாள். பின்னர், மதுரை நகரை எரித்துவிட்டு வஞ்சிமா நகரத்தை நோக்கிச் செல்கிறாள். இது மதுரைக் காண்ட மாகும்.*

*வஞ்சிமா நகரில் மலைவளம் காணச்சென்ற சேரன் செங்குட்டு வனிடம் குறவர்கள் கூறிய செய்தியைக் கேட்டு, அரசியின் விருப்பத் தையும் கேட்டு, வடக்கே சென்று, இமய மலையிலிருந்து கல்லைக் கொண்டு வந்து, கங்கையில் நீராட்டி, புனிதப்படுத்தி, கண்ணகிக்குக் கோயில் எடுக்கிறான். கண்ணகி கடவுள் வடிவில் தோன்றி எல்லோர்க்கும் வரம் தந்து மறைகிறாள். இதுவே வஞ்சிக் காண்டமாகும்.*

## நூலின் சிறப்பியல்புகள்

*தமிழில் கிடைக்கும் முதல் காப்பியம் சிலம்பாகும். கதையின் கருவால் பெயர் பெற்று விளங்கும் பெருமை வாய்ந்தது சிலப்பதிகார மாகும். கதையில் வரும் எல்லா நிகழ்வுகளுக்கும் சிலம்பே காரணமாக அமைவதால், இக்காப்பியத்திற்குச் சிலப்பதிகாரம் என்று பெயர் சூட்டினார் இளங்கோவடிகள்.*

## இயல் தமிழ்க்காப்பியம்

*காப்பியத்தின் தொடக்கமும், கதையின் போக்கும் சிறப்பு மிக்கதாகக் காணப்படுகிறது. மனையறம் படுத்தக் காதையில், கண்ணகியின் அழகினை வருணனை செய்யும் போது,*

**“மாசறு பொன்னே வலம்புரி முத்தே!**
**காசறு விரையே கரும்பே தேனே”**

*என்று பாராட்டப்படுவதையும், அடைக்கலக் காதையில்*

**“பொன்னே, கொடியே! புனைபூங் கோதாய்”**

*என கோவலனின் அக அழகைப் பாராட்டுவதையும், அந்திமாலைச் சிறப்புச் செய் காதையில் மாதவியும், கோவலனும் போட்டிப்போட்டு பாடியப் பாடல்கள் இனிமையும், சந்தநயமும் மிக்க வரிகளாகும்.*

**“கயல் எழுதி வில் எழுதிக் கார் எழுதிக் காமன்**
**செயல் எழுதி தீர்த்தமுகம் திங்களோ! காணீர்”**

*என்ற பாடல் வரிகளும், மதுரை மாநகரத்தில், கண் சிவக்க, கை சிவந்து, உணவு சமைத்து, காதல் கணவனான கோவலனுக்கு உணவுப் பரிமாறி, ஒன்றாக உறவாடும் கலையழகு மிகுந்த காட்சிகளும், தன் கணவன் சூழ்ச்சித் திறத்தால் கொல்லப்பட்டான் என்ற செய்தி கேட்டதும், அழுது புலம்பி,*

**“பெண்டிரும் உண்டுகொல்? பெண்டிரும் உண்டுகொல்?**
**சான்றோரும் உண்டுகொல்? தெய்வமும் உண்டுகொல்?**
**தெய்வமும் உண்டுகொல்? தெய்வமும் உண்டுகொல்?”**

*என்று சீறிய செயலும், வழக்குரைக் காதையில் இளங்கோவடிகளின் சொல்திறத்தை விளக்கும் சிறந்த இயல்தமிழிக் காப்பியமாகும்.*

## இசைத்தமிழ்க் காப்பியம்

*தமிழர்களின் இசைக்கலை, கூத்து முதலிய பல்வேறு செய்தி களையும், இசை பற்றிய நுணுக்கங்களையும் அறிந்து கொள்ளும் சிறந்த காப்பியநூல் சிலப்பதிகாரமாகும்.*

*அரங்கேற்றுக் காதை, கானல் வரி, ஆற்றுவரி, அம்மானை வரி, வேனிற் காதை, ஆய்ச்சியர் குரவை, வள்ளைப்பாட்டு ஆகிய காதைகளில் பழந்தமிழகத்து இசைக்கருவிகளையும், இசை நுணுக்கத்தையும் அறிந்து கொள்ளும் காப்பியமாகும். அரங்கேற்றுக் காதையில், ஆடல் அரங்கின் இலக்கணம் பற்றியும் ஒரு முக எழினி, பொருமுக எழினி, கரந்துவரல் எழினி என்ற மூவகைப்பட்ட திரைகள் பற்றியும், நாடக அரங்கினுள் நிழல் விழாமல் விளக்குகள் பொருத்தப்பட்டிருக்கும் முறை பற்றியும், ஆடற்கலையின் நுணுக்கங்களையும் பாடும் பொழுது,*

**“குழல் வழி நின்றது யாழே யாழ்வழித்**
**தண்ணுமை நின்றது தகவே தண்ணுமைப்**
**பின்வழி நின்றது முழவே முழவோடு**
**கூடிநின் றிசைத்தது ஆமந்திரிகை”**

*என்று வரிசை வரிசையாக அடுக்கிக் கொண்டே போகிறார் இளங்கோவடிகள்.*

## நாடகத்தமிழ் காப்பியம்

*தமிழில் தோன்றிய முதல் நாடகத் தமிழ்க் காப்பியம் சிலப்பதிகார மாகும். வழக்குரைக் காதையில் பாண்டிய நெடுஞ்செழியனுக்கும், கண்ணகிக்கும் இடையே நடைபெறும் உரையாடல்களையும், கண்ணகி, கோவலன், மாதவி ஆகியோரின் வாழ்வியல் நிகழ்வுகளை வரிசையாகக் கதை சொல்வது போன்று மட்டுமல்லாமல் இடத்திற்கும், சூழலுக்கும்*

*ஏற்றாற் போல மாற்றியமைத்துச் சொல்லியதால் இக்காப்பியம் சிறந்த நாடகக் காப்பியம் போல் காணப்படுகிறது.*

### மூவேந்தர் காப்பியம்

*சிலப்பதிகாரம் வஞ்சிக் காண்டத்தில் சேரமன்னன் செங்குட்டுவனின் சிறப்பினையும், மதுரைக் காண்டத்தில் பாண்டிய நெடுஞ்செழியனின் ஆட்சியியல் நிகழ்வுகளையும், புகார்க் காண்டத்தில் சோழன் கரிகால் பெருவளத்தானின் சிறப்புக்களையும் ஒவ்வொரு காண்டத்திற்குள்ளும் எடுத்து சொன்னதால் இக்காப்பியத்தை மூவேந்தர் காப்பியம் எனலாம்.*

### வரலாற்றுக் காப்பியம்

*மூவேந்தர்களின் ஆட்சியில் சிறப்புக்களையும், அவ்வேந்தர்களின் ஆட்சிக்குட்பட்ட மக்களின் வாழ்க்கைச் சிறப்பினையும் எடுத்து சொல்வதோடு கானல் வரி மற்றும் கடலாடு காதையில் மருதநில மக்களின் வாழ்வியல் நிகழ்ச்சிகளையும், குன்றக் குரவையில் குறிஞ்சி நிலமக்களின் வாழ்க்கை நிகழ்ச்சினையும், வேட்டுவ வரியில் பாலை நில மக்களின் வாழ்வியல் நிகழ்ச்சிகளையும், ஆய்ச்சியர் குரவையில் முல்லை நில மக்களின் வாழ்வியல் நிகழ்வுகளையும் எடுத்துச் சொல்வதோடு, பழந்தமிழகத்தின் தலைநகரங்களாக விளங்கிய மதுரை, பூம்புகார் போன்ற இடங்களைப் பற்றிய வரலாற்றுக் குறிப்புகளும் இடம் பெறுவதால் இக்காப்பியம் ஒரு சிறந்த வரலாற்றுக் காப்பியமாகத் திகழ்கிறது.*

### தேசியக்காப்பியம்

*சிலப்பதிகாரத்தில் சோழ நாட்டின் செல்வச் செழிப்பினையும், மக்களின் செயல்கள், சோழ அரசனின் செயல் திறத்தைப் புகார்க் காண்டத்திலும், பாண்டிய நாட்டின் இயற்கை அழகினையும், நெடுஞ்செழியனின் சிறப்பியல்புகளை மதுரைக் காண்டத்திலும், சேர நாட்டின் இயற்கை வளத்தோடு, சேர மன்னனின் வெற்றிச் சிறப்பினையும் ஒருங்கே இணைத்து இளங்கோ அடிகள் பாடியுள்ள திறம் குறிப்பிடத் தக்கது. மேலும் சோழ நாட்டில் வணிக குலத்தில் பிறந்த கண்ணகியை மதுரைக் காண்டத்தில் அநீதியைக் கண்டு பொங்கியெழும் வீரப் பெண்மணியாக மாற்றி... சேர நாட்டில் எல்லோரும் தொழுதேற்றும் பத்தினிக் கடவுளாக மாற்றிக் காட்டியதால் இக்காப்பியத்தை பழந்தமிழகத்தின் தேசியக் காப்பியமாகக் கருதலாம்.*

### குடிமக்கள் காப்பியம்

*சிலப்பதிகாரத்தில் சேர, சோழ, பாண்டிய மன்னர்களைப் புகழ்ந்து பாடியிருந்தாலும், காப்பியத்தின் தலைவியையும், தலைவனையும்*

*மக்களில் இருந்தே தேர்வு செய்து கதைத் தலைவர்களாகவே பாடியிருப்பதால் இது குடிமக்கள் காப்பியமாயிற்று. அரசர்களையும், தெய்வத்தினையும் புகழ்ந்து கவிபாடும் பழங்காலத்தில் சாதாரண குடிமக்களையே கதைத் தலைவர்களாகவே கொண்டதால் இது குடிமக்கள் காப்பியமாகும்.*

*சிலம்பின் ஒவ்வொரு சிறப்புக்களும் மனித சமூகத்தை ஒவ்வொரு மாதிரியாக சித்தரித்துக் காட்டும் வைக்கும் ஆற்றல் வாய்ந்தது. சிலம்பை அடியொற்றியே பிற்காலக் காப்பியங்கள் அனைத்தும் இலக்கிய வளமும், சொல் வளமும் பெறுவதற்கு இக்காப்பியம் அடித்தளமாகும். பழந்தமிழரின் தேசியக் காப்பியம், வரலாற்றுக் காப்பியம், சமுதாயக் காப்பியம் என்று சொல்வதோடு மட்டுமல்லாமல் சாதாரண மனிதர்களையே கதைத் தலைவர்களாக உருவாக்கிக் காட்டியிருப்பது புதுமையிலும் புதுமையாகும்.*

## 2. மணிமேகலை

*தமிழில் தோன்றிய இரண்டாவது காப்பியம் இதுவாகும். சமயம் சார்ந்து எழுதப்பட்ட முதல் காப்பியம் மணிமேகலையாகும்.*

### நூல் அமைப்பு

*இளங்கோ அடிகளும், இந்நூலாசிரியரும் உற்ற நண்பர்கள். இந்நூற்பதிகத்தில், இந்நூல் எழுந்ததற்கானக் காரணத்தை எடுத்துச் சொல்லும் பொழுது,*

**“இளங்கோ வேந்தன் அருளிக் கேட்ப**
**வளங்கெழு கூலவணிகன் சாத்தன்**
**மாவண் தமிழ்த்திறம் மணிமேகலை துறவு**
**ஆறையம் பாட்டினுள் அறிய வைத்தனென்”** **(பதிகம் 95-98)**

*என்கிறது.*

***ஆசிரியர் :*** *மதுரைக் கூலவணிகன் சீத்தலைச் சாத்தனார்*
***காலம் :*** *கி.பி. 9-ஆம் நூற்றாண்டு என்பர்.*

### நூல் பிரிவுகள்

*இந்நூல் 30 காதைகளை உடையது. விழாவறைக் காதை முதல் பவத்திறம் அறுக பாவை நோற்றக் காதை முடிய 30 காதைகளை உடையது.*

## நூல் தொடக்கம்

*மணிமேகலைக் காப்பியம் விழாவறைக் காதையில் தொடங்குகிறது. பூம்புகாரில் நடைபெறும் இந்திர விழாவின் 28 நாட்களின் சிறப்பினை விவரித்துக் கூறுகிறது.*

**“பசியும் பிணியும் பகையும் நீங்கி**
**வசியும் வளனும் சுரக்கென வாழ்த்தி”**
**என விழா தொடங்குவதைக் குறிப்பிடுகிறது.**

## பெயர்ச் சிறப்பு

*காப்பியத் தலைவியின் பெயரால் மணிமேகலை என்றும் மணிமேகலைத் துறவு என்றும் அழைக்கப்பட்டது.*

## கதைச் சுருக்கம்

*கோவலன் கொலையுண்டதை அறிந்த மாதவி பௌத்த மாடத் திற்குச் சென்று வாழ்ந்தாள். மகள் மணிமேகலையும் அவளுடன் தங்கியிருந்தாள். பூசைக்குமலர் பறிக்க, மணிமேகலை உவவனம் சென்றாள். சோழ இளவரசன் உதயகுமாரன் அவள் பின் தொடர்ந்தான். அவளோ, அங்குள்ள பளிங்கறையில் புகுந்து தப்பினாள். மனிமேகலா தெய்வம் அவளை மயக்கி மணிபல்லவத் தீவுக்குத் தூக்கிச் சென்றது. அங்கு அவள் தன் பழம்பிறப்பினை உணர்ந்து, தீவதிலகையின் உதவியால் அமுத சுரபியைப் பெற்று புகார் நகரம் திரும்பினாள். காயசண்டிகை வழிகாட்ட, ஆதிரை என்ற கற்புக்கரசியிடம் முதல் உணவு பெற்று, அமுத சுரபியால் அன்னதானம் செய்தாள். சிறைக் கோட்டத்தை அறைக் கோட்டமாக்கினாள். உதயகுமாரன் பின் தொடர்ந்ததால், காயசண்டிகை போல் உருவம் மாறினாள். அதனைப் புரிந்து கொண்ட இளவரசன், அவளை விடாமல் பின்தொடர, நடந்ததை அறியாத காயசண்டிகையின் கணவன், இளவரசனைக் கொலை செய்தான். மகனைப் பறிகொடுத்த இராசமா தேவி, மணிமேகலைக்குப் பெருந்தீங்குகள் இழைக்க முயன்றாள். ஆனால் மணிமேகலையை ஒன்றும் செய்ய இயலவில்லை. இறுதில் மன்னிப்புக் கேட்ட இராசமாதேவிக்கு அறிவுரை கூறிப் பின், மணிமேகலை வஞ்சி மாநகர் சென்று, அறவண அடிகளிடம் உரை கேட்டு, காஞ்சி சென்று உயிர்க்கடன் செய்து, தவம் மேற்கொண்டாள்.*

## சீர்திருத்தக் காப்பியம்

*சீத்தலைச் சாத்தனார் புத்தமதக் கருத்துக்களைப் பரப்பும் ஒரே நோக்கோடு மட்டும் இக்காப்பியத்தை இயற்றவில்லை. அந்தக் காலக் கட்டத்தில் புரட்சிகரமாக விளங்கிய புத்தமதத்தை ஒரு அடிப்படைக்*

*கருவியாகவே மட்டும் கொண்டு, பரத்தையொழிப்பு, மதுவொழிப்பு, சிறையொழிப்பு, பசியொழிப்பு, சாதி ஒழிப்பு போன்ற சீர்திருத்தக் கருத்துக்கள் நிரம்பப் பெற்ற காப்பியமாகப் படைத்தார்.*

## பசிப்பிணியின் கொடுமை

*"பசி வந்தால் பத்தும் பறந்து போகும்" என்பது பழமொழி. அந்தப் பசியின் கொடுமையை இந்நூல் எடுத்துக்கூறுவது போல் எந்த நூலும் எடுத்துக் கூறவில்லை. பசிப்பிணியை,*

"குடிப்பிறப் பழிக்கும் விழுப்பம் கொல்லும்
பிடித்தக் கல்வி பெரும்பிணை விடூஉம்
மாணெழில் சிதைக்கும் நாணனி களையும்
பூண்முலை மாதரோடு புறங்கடை நிறுத்தும்"

*என்கிறார்*

## அறக்காப்பியம்

*பண்டைய தமிழர்களின் அறம் சார்ந்த கருத்துக்கள் காப்பியத்தில் ஏராளம் இடம்பெறச் செய்கிறார் ஆசிரியர். அறத்திற்கு இலக்கணம் கூறுவது போல் அமைந்த பாடலொன்று கற்பனை நயமிக்கக் கருத்துக்களால் இரண்டறப் பிணைந்து காணப்படுகிறது.*

"ஆற்றுநர்க்களிப்போர் அறவிலை பகர்வோர்
ஆற்றாமாக்கள் அரும்பசி களைவோர்
மேற்றே உலகின் மெய்நெறி வாழ்க்கை"

*என்றும்,*

"அறமெனப் படுவது யாதெனக் கேட்பின்
மறவாது இதுகேள்; மன்னுயிர்க் கெல்லாம்
உண்டியும் உடையும் உறையுளும் அல்லது
கண்டதில்....."

*என்றும்,*

"மண்டிணி ஞாலத்து வாழ்வோர்க் கெல்லாம்
உண்டி கொடுத்தோர், உயிர் கொடுத் தோரே"

*என அறத்திற்கு மிகச் சிறந்த கருத்துக் கோர்வையினை எடுத்துக் கூறுகிறது.*

## நிலையாமைக் கருத்துக்கள்

*இவ்வுலகில் இளமை, உடல், செல்வம் முதலிய ஏனைய எல்லாப் பொருள்களும் ஒரு நாள் அழிந்து போகக் கூடியது. வாழ்வின் கடைசி வரை நம்முடன் துணைக்கு வருவது அறம் ஒன்றே ஆகும் என்பதை,*

“இளமையும் நில்லா யாக்கையும் நில்லா
வளவிய வான்பெருஞ் செல்வமும் நில்லா
புத்தேள் உலகம் புதல்வரும் தாரார்
மிக்க அறமே விழுத்துணை ஆவது”

என்று சிறப்பாக எடுத்துக் கூறுகிறார். மேலும் நிலையாமையை,

“வினையின் வந்தது வினைக்குவிளை வாயது
புனைவன் நீங்கில் புலால்புறத் திடுவது
மூப்புவிளி வுடையது தீப்பிணி இருக்கை”

உடையது என்கிறார்.

## மனிதநேயக்காப்பியம்

உலகத்து உயிர்கள் அனைத்திற்காகவும் இரக்கம் கொள்ளுதல் வேண்டும் என்பதை மணிமேகலை கூறும் போது,

“எவ்வுயிர்க் காயினும் இரங்குதல் வேண்டும்”

என்கிறாள். புத்தசமயக் கருத்துக்கள் பலவற்றை அழகுத் தமிழில் மொழி பெயர்த்து தருவது மிகவும் பாராட்டுதலுக்குரியது. எல்லாத் தமிழ்க் காப்பியங்களைவிடவும் எளிமையானச் சொற்களை, மிக எளிய நடையில் அமைத்து தந்திருப்பது சிறப்புக்குரியதாகும்.

## தமிழின் இரட்டைக் காப்பியங்கள்

இளங்கோவடிகள் இயற்றிய சிலப்பதிகாரமும் சீத்தலைச் சாத்தனார் இயற்றிய மணிமேகலையும் தமிழின் ‘இரட்டைக் காப்பியங்கள்’ என அழைக்கப்படுகின்றன. சிலப்பதிகாரம், ஒரு சமண சமயக் காப்பியம். மணிமேகலை, ஒரு பௌத்த சமயக்காப்பியம். இவை இரண்டையும் இணைத்து இரட்டைக் காப்பியங்கள் என்று அழைக்கும் மரபு உள்ளது. இக்கருத்து சரிதானா? என்பதை ஆராய்ச்சியாளர்களின் பல்வேறு கருத்துக்கள் கொண்டு ஒரு முடிவுக்கு வரலாம்.

## அடிப்படைக்காரணங்கள்

கதையின் ஒற்றுமை கருதியும் ‘மணிமேகலையோடு உரைபொருள் முற்றிய சிலப்பதிகாரம்’ என்று சிலம்பின் இறுதியில் இடம் பெற்றுள்ள உரைபெறு கட்டுரையில் வரும் தொடரை வைத்தும் இவ்விரு நூல்களையும் இரட்டைக் காப்பியங்கள் என்பர். மேலும், இதற்குச் சான்றாக, சிலப்பதிகாரத்தை அரங்கேற்றும் போது சாத்தனார் அருகமர்ந்து கேட்டார். அவ்வண்ணமே, மணிமேகலையை அரங்கேற்றும் போது இளங்கோவடிகள் கேட்டார் என்று இவ்விரு நூல்களின் பதிகங்களிலும் காணப்படுகின்றன.

*இக்கூற்றின் பொருத்தத்தை அறிய இரு கதைகளையும் சுருக்கமாகக் காண்போம்.*

## சிலப்பதிகாரக் கதை

*காவிரிப்பூம்பட்டினத்தில் .......................... வாழ்த்தி மறைந்தது. (கதையினைச் சுருக்கமாக எழுதவும்)*

## 2. மணிமேகலைக் கதை

*கோவலன் கொலையுண்டதை .................. தவம் மேற்கொண்டது. (கதையினைச் சுருக்கமாக எழுதவும்)*

## சிலம்புக்கும் மேகலைக்கும் உள்ள ஒற்றுமைகள்

1. *கோவலன் - கண்ணகி - மாதவி பற்றிய கதை சிலப்பதிகாரம். கோவலன் - மாதவி - மணிமேகலை பற்றிய கதை மணிமேகலை.*
2. *சிலப்பதிகாரம் எங்கு முடிகிறதோ, அங்கு மணிமேகலை தொடங்குகிறது. எனவே, சிலம்பின் தொடர்ச்சியே மணிமேகலை.*
3. *இரண்டு காப்பியங்களின் பெயர்களும் பெண்களின் அணிகலன் களால் ஆனவை. சிலம்பு, காலில் அணிவது; மேகலை இடையில் அணிவது.*
4. *இரண்டு காப்பியங்களும் அகவற் பாவால் ஆனவை.*
5. *இரண்டிலுமே கடவுள் வாழ்த்துப் பாடல்கள் இல்லை.*
6. *இரண்டு காப்பியங்களிலும் முப்பது காதைகளே அமைந்துள்ளன.*
7. *இரண்டு காப்பியங்களும் விழாவில் தொடங்குகின்றன. சிலப்பதி காரம் மணவிழாவில் தொடங்குகிறது. மணிமேகலை இந்திர விழாவில் தொடங்குகிறது.*
8. *இரண்டு காப்பியங்களும் இறுதியில் வஞ்சிமா நகரில் முடிவடை கின்றன.*
9. *இயற்கை இறந்த நிகழ்ச்சிகள் இரண்டிலுமே வருகின்றன.*
10. *இரண்டுமே கணிகையர் குலப் பெண்களுக்குப் பெருமை சேர்க் கின்றன.*
11. *இரண்டிலுமே வரும் கதைப் பாத்திரங்கள் ஒன்றே; கதை நிகழும் களமும் ஒன்றே; கதை நிகழும் காலமும் இடைவெளியின்றித் தொடர்ச்சியாகவே உள்ளது.*

12. இரண்டு காப்பியங்களும் பெண்களுக்குப் பெருமை சேர்க்கின்ற புரட்சிக் காப்பியங்களாகும்.

13. மதுராபுரித் தெய்வம் சிலம்பில் வருகிறது. மணிமேகலா தெய்வம் மேகலையில் வருகிறது.

14. இரண்டிலும் ஊழ்வினை வலியுறுத்தப்படுகிறது. சிலம்பில் கோவலன் சாவிற்கும் மணிமேகலையில் உதயகுமாரன் சாவுக்கும் ஊழ்வினையே காரணமாகப்படுகிறது.

15. இரண்டிலும் கதைத் தலைவர்கள் அநியாயமாகக் கொல்லப்படு கின்றனர்.

16. சில சொற்றொடர்கள், சில அடிகள் - இரண்டிலும் ஒன்றாகக் காணப்படுகின்றன.

17. இளங்கோவடிகளும் சீத்தலைச் சாத்தனாரும் சமகாலத்தைச் சார்ந்தவர்கள் என்று இரண்டின் பதிகங்களும் கூறுகின்றன. சாத்தனார் கூறிய கண்ணகி பற்றிய செய்தியை வைத்துத் தான் 'நாட்டுதும் யாமோர் பாட்டுடைச் செய்யுள்' என்று சிலப்பதி காரத்தை எழுதும் முடிவுக்குத் தாம் வந்ததாக இளங்கோவடிகள் கூறுகிறார். இளங்கோவடிகளைச் சிலப்பதிகாரம் எழுதும்படிச் சாத்தனார் வேண்டிக் கொண்டதாகப் பதிகம் கூறுகிறது.

18. அறம், பொருள், இன்பம் மூன்றையும் சிலப்பதிகாரமும் வீடு பேற்றினை மணிமேகலையும்காட்டுவதால், இரண்டு காப்பியங் களும் இணைந்து ஒரு பெருங்காப்பியமாக முடியும் என்பர். இதற்குச் சான்று 'மணிமேகலை மேல் உரைப் பொருள் முற்றிய சிலப்பதிகாரம் முற்றும்' என்ற சிலம்பில் உள்ள உரைபெறு கட்டுரையின் வரிகளாகும்.

## 3. சீவக சிந்தாமணி

1. சமண சமயம் சார்ந்த காப்பியம்.

2. "சிந்தாமணி" என்றும் "சீவக சிந்தாமணி" என்றும் இந்நூலை அழைப்பர்.

3. இக்காப்பியம் அறம், பொருள், இன்பம், வீடுபேறு என்ற நான்கு உறுதிப் பொருள்களையும் கூறுவதால் இந்நூலை "முடிப் பொருள் தொடர் நிலைச் செய்யுள்" என்றும் அழைப்பர்.

| | | |
|---|---|---|
| ஆசிரியர் | : | திருத்தக்கத்தேவர் |
| காலம் | : | கி.பி. 9-ஆம் நூற்றாண்டு |

| | | |
|---|---|---|
| *பா* | : | *விருத்தப்பாவில் பாடிய முதல் காப்பியம்* |
| *சிறப்புப்பெயர்* | : | *மண நூல்* |

## நூல் அமைப்பு முறை

*இக்காப்பியம் நாமகள் இலம்பகம் முதல் முக்தி இலம்பகம் இறுதியாக 13 இலம்பகங்களையும் 3145 செய்யுள்களையும் கொண்டது.*

## சிறப்புப்பெயர் - விளக்கம்

*இக்காப்பியத்தை "மண நூல்" என்றும் அழைப்பர். கல்வியால் நாமகளையும், நாட்டை வெற்றி பெற்றதைக் கூறும் மண்மகள் இலம்பகம், சீவகன் ஆட்சி செய்ததை பூமகள் இலம்பகமும், வீடுபேற்றால் முக்தி மகளையும், பிற எட்டு இலம்பகங்களாக சீவகன் காந்தருவதத்தை, குணமாலை, பதுமை, கேமசரி, கனகமாலை, விமலை, சுரமஞ்சரி, இலக்கணை ஆகிய எட்டுப் பேரை மணம் புரிந்ததையும், தன் நண்பன் பதுமுகனுக்குக் கோவிந்தையை மணம் செய்து வைத்ததால் இந்நூலை "மண நூல்" என்றும் அழைத்தனர்.*

## காப்பியக் கதை

*ஏமாங்கத நாட்டு மன்னன் சச்சந்தன். அவன் மனைவி விசையை. விசையையின் அழகில் மயங்கிய சச்சந்தன் அந்தப்புரத்திலேயே தங்கி இருந்து விட்டு ஆட்சிப் பொறுப்பினைக் கெடுமதி படைத்த தலைமை யமைச்சன் கட்டியங்காரனிடம் - ஒப்படைத்தான். கட்டியங்காரன் சூழ்ச்சி செய்து சச்சந்தனை அரண்மனையில் வைத்துக் கொலை செய்ய முயற்சித்த போது, கருவுற்றிருந்த தன் மனைவியை ஒரு மயில் பொறி மீது ஏற்றி அனுப்பிவிட்டு, சச்சந்தன் போரில் இறந்தான். விசையை சென்ற மயில் பொறி சுடுகாட்டில் போய் இறங்கியது. அங்கு விசையை ஒரு அழகான ஆண்குழந்தையைப் பெற்றெடுத்தாள். பின்னர் தவம் மேற்கொள்ளச் சென்றாள். அப்பொழுது அந்த வழியாக வந்த கந்துக்கடன் என்னும் வணிகன் சீவகனை எடுத்து வளர்த்து வந்தான். சீவகன் அச்சணந்தி என்பவரிடம் நன்கு கல்வி கற்றுத் தேர்ச்சி பெற்றான். பின்னர் தன் தாயை தேடிக் கண்டுப்பிடித்து தாயின் அறிவுரைப்படி, எட்டுப் பெண்களை மணம் செய்ததோடு, தன்னுடைய நண்பன் பதுமுகனுக்குக் கோவிந்தையை மணம் செய்து வைத்தான். பின்னர் ஏமாங்கத நாட்டைக் கைப்பற்ற எண்ணி, போர் செய்து கட்டியங்காரனை வென்று, ஆட்சியைக் கைப்பற்றி; வாழ்க்கையை மகிழ்ச்சியுற நடத்திய பிறகு ஞானம் பெற்று, துறவு வாழ்க்கையை மேற்கொண்டான்.*

## சிறப்பியல்புகள்

1. *கல்வியின் சிறப்பினையும், மேன்மையினையும் ஆசிரியர் வருணிக்கும் திறம் அழகு மிக்கதாகும்.*

**“கைப்பொருள் கொடுத்துங் கற்றல்**
**கற்றபின் கண்ணு மாகும்**
**மெய்ப்பொருள் விளைக்கும் நெஞ்சின்**
**மெலிவிற்கோர் துணையு மாகும்.”**

*என்கிறார்.*

2. *ஏமாங்கத நாட்டின் செல்வ வளத்தை விளக்கும் பாடல் ஆசிரியரின் கற்பனைத் திறனுக்கு அளப்பரிய சான்றாகும். படித்து, சுவைத்து மகிழும் கற்பனா ஆற்றல் மிக்கதாகும்! ஆசிரியரின் பொங்கி வரும் கற்பனைப் பாடல் ஒன்று.*

**“காய்மாண்ட தெங்கின் பழம்வீழக் கமுகினெற்றிப்**
**பூமாண்ட தீந்தேன் தொடைகீறி வருக்கை போழ்ந்து**
**தேமாங் கனிசிதறி வாழைப் பழங்கள் சிந்தும்**
**ஏமாங் கதமென் றிசையாற் றிசைபோய துண்டே”**

*என்கிறார்.*

3. *சீவகன் பிறந்த இடத்தை ஆசிரியர் வருணிக்கும் அவலச் சுவை மிகச் சிறந்தது ஆகும்.*

**“வெவ்வாய் ஓரி முழவாக விளிந்தார் ஈமம் விளக்காக**
**ஒவ்வாச் சுடுகாட் டுயரரங்கின் நிழல் போல் நுடங்கிப் பேயாட**
**எவ்வாய் மருங்கும் இருந்திரக்கிக் கூகை குழறிப் பாராட்ட**
**இவ்வா றாகிப் பிறப்பதோ இதுவோ மன்னர்க்கியல் வேந்தே”**

*என்கிறார்.*

4. *அரசர்களுக்குரிய இயல்புகளை வருணிக்கும் திறன் போற்று தற்குரியது.*

**“ஒற்றர் தங்களை ஒற்றர்வைத்து அறிதலும்**
**கற்ற மாந்தர்களைக் கண்ணெக் கோடலும்”**

*என்கிறார்.*

5. *சீவகனின் வரலாற்றினைக் கூறும் பொழுது இடையிடையே சமண சமயத்தின் கருத்துக்களையும் ஆசிரியர் எடுத்துக் கூறுகிறார்.*

**“மெய்வகை தெரிதல் ஞானம்; விளங்கிய பொருள்கள் தம்மைப்**
**பொய்வது யின்றித் தேறல் காட்சி, ஐம்பொறியும் வாட்டி**

**உய்வகை உயிரைத் தேயா தொழுகுத லொழுக்கம் மூன்றும்**
**இவ்வகை நிறைந்த போழ்தே இருவினை கழியும் என்றான்"**

*சீவக சிந்தாமணி முழுமைக்கும் நச்சினார்க்கினியரின் எளிய, அரிய, உரையொன்றுள்ளது. கற்பனை நலத்திலும், சந்த இனிமையிலும், சிந்தாமணிக் காப்பியம் சிறந்து விளங்குகின்றது*

## 4. வளையாபதி

1. *ஐம்பெரும் காப்பியங்களில் நான்காவது காப்பியம்.*
2. *சமண சமயத்தைச் சார்ந்தது.*
3. *காலத்தால் அழிந்து போன காப்பியங்களில் இதுவும் ஒன்று.*
4. *ஒரு காலத்தில் மிகவும் புகழோடு விளங்கியது என்பதை உரையாசிரியர்கள் பலரும், வளையாபதியின் பாடல்களை மேற்கோளாக எடுத்துக் காட்டுவதிலிருந்து அறிந்து கொள்ளலாம்.*

### நூல் அமைப்பு

1. *இந்நூலின் பாடல்கள் புறத்திரட்டிலும், யாப்பெருங்கல விருத்தி யிலும், தொல்காப்பியம், சிலப்பதிகாரம் போன்ற நூல்களின் உரைகளிலுமாகச் சேர்த்து 72 பாடல்கள் மட்டுமே தற்பொழுது கிடைத்துள்ளன.*
2. *புறத்திரட்டு மூலம் 66 பாடல்களும், உரையாசிரியர்களின் மேற்கோள்களில் 6 பாடல்களும் கிடைத்துள்ளன.*

*காலம் : கி.பி. 10-ஆம் நூற்றாண்டாக இருக்கலாம்.*

*ஆசிரியர் : தெரியவில்லை.*

### கதைச்சுருக்கம்

*நவகோடி நாராயணன் என்னும் வணிகன் வைசியர் குலத்தைச் சார்ந்தப் பெண்ணைத் திருமணம் செய்தான் என்பதற்காக, அக்குலத்தைச் சார்ந்தவர்கள் அவரை வெறுத்து ஒதுக்கினர். வேறு வழியில்லாமல் அவனும் வாழ்வாதாரம் தேடி அயல் நாட்டிற்குச் சென்று விடுகிறான். திருமணம் செய்த அந்தப் பெண்ணிற்குப் பிறந்த ஆண் குழந்தை பல ஆண்டுகளுக்குப் பிறகு, பூம்புகார் நகரம் சென்று, தன் தந்தையைத் தேடிக் கண்டுபிடித்து தன் தாயுடன் சேர்த்து வைத்ததாக வசிய புராணத்தின் 35-ஆம் சருக்கம் வளையாபதியின் காப்பியக் கதையைக் கூறுகிறது.*

## சிறப்பியல்புகள்

1. *வளையாபதி காப்பியத்தில் வரும் ஒரு பாடல் குழந்தைச் செல்வத்தின் சிறப்புகளை எடுத்துக் கூறுவதோடு, மனித சமுதாயத்தில் வாழ்க்கைக்குத் தேவையான அறக்கருத்துக்களையும் எடுத்துக் கூறுகிறது.*

**“பொறையிலா அறிவு, போகப் புணர்விலா இளமை மேவத்**
**துறையிலா வசை வாவித் துகிலிலாக் கோலத் தூய்மை**
**நறையிலா மாலை கல்வி நலமிலாப் புலமை நன்னீர்ச்**
**சிறையிலா நகரம் போலும் சேயிலாச் செல்வமன்றே”**

*என்னும் பாடல் தெரிவிக்கின்றது.*

2. *நாட்டின் இயற்கைச் சிறப்பை வருணிக்கும் ஒரு பாடல் மிகச் சிறந்த சொல்லோவியமாகத் திகழ்கிறது.*

**“செந்நெல்அங் கரும்பினோடு இகலும் தீஞ்சுவைக்**
**கண்ணல்அங் கரும்புதன் கமுகைக் காய்ந்து எழும்**
**இன்னவை காண்கிலன் என்று பூகமும்**
**முன்னிய முகில்களால் முகம்பு தைக்குமே”**

*என்ற பாடலில் செழுமையான நெற்பயிரானது கரும்பு போல் ஓங்கி வளர்கிறது. நெற்பயிரானது தன்னைப் போல் வளர்வதைக் கண்ட கரும்பானது பாக்குமரத்தோடுப் போட்டியிட்டு வளர்கின்றது. கரும்பு தன்னோடுப் போட்டியிடுவதைக் கண்ட பாக்கு மரமானது, நாணம் அடைந்து, மேகத்தில் தன்னுடைய நுனிப்பகுதியை மறைத்துக் கொண்டதாம்! அழகிய, நயமான கற்பனை வளமிக்க வளையாபதி நூல் காலத்தால் அழிந்து போனது தமிழ்த் தாயின் வளைக்கரங்களில் ஒரு ஆபரணத்தைத் தொலைத்து விட்டாளோ என்று எண்ணத் தோன்றுகிறது.*

## 5. குண்டலகேசி

1. *ஐம்பெரும் காப்பியங்களில் ஐந்தாவது காப்பியமாகும்.*
2. *பௌத்த சமயம் சார்ந்த காப்பியம்.*
3. *காலத்தால் சிதைந்து போன, அழிந்து போன காப்பியங்களில் இதுவும் ஒன்று.*
4. *காப்பியத்தலைவியால் பெயர் பெற்ற நூல். குண்டலகேசி என்றால் “சுருண்ட கூந்தலை உடையப் பெண்” என்று பொருள்.*

*ஆசிரியர் : நாதகுத்தனார்*

காலம் : கி.பி. 8-ஆம் நூற்றாண்டு அல்லது கி.பி. 9-ஆம் நூற்றாண்டு என்பர்.

பா : விருத்தப்பா

## தழுவல் நூல்

இக்காப்பியத்தின் கதை, வடமொழியிலுள்ள, கத்திய சிந்தாமணி, சக்ர சூளாமணியையும் தழுவி எழுதப்பட்டதாகும்.

## நூல் அமைப்பு

நீலகேசி உரை யாப்பெருங்கல உரை, வீரசோழிய உரை, சிவஞான சித்தியாருக்கு ஞானப்பிரகாசர் உரை நீலகேசி உரையிலும், புறத்திரட்டு நூலிலுமாகச் சேர்ந்து 22 பாடல்கள் மட்டுமே கிடைக்கின்றது. நீலகேசி உரையில் குண்டலகேசியின் 100 பாடல்களின் முதல் குறிப்பும் காணப்படுகிறது. ஞானப்பிரகாசர் சில பாடல்களை மேற்கோளாகக் காட்டுகிறார். தக்கயாகப் பரணி உரையும் சில பாடல்களை மேற்கோளாகக் காட்டுகிறது.

## சிறப்புப் பெயர்

இந்நூல் “குண்டலகேசி விருத்தம்” என்றும் அழைக்கப்படுகிறது. இக்காப்பியத்தை “வாத காப்பியம்” என்றும் அழைப்பர்.

## நூல் கதை

குண்டலகேசி நூலின் வரலாறு பௌத்த சமயக் கதையான தேரி கதையின் 46-ஆம் பாடல் எடுத்துக் கூறுகிறது. குண்டலக்கேசியின் வரலாற்றை வைசிய புராணத்தின் 34-ஆம் அத்தியாயம் எடுத்துக் கூறுகின்றது. இந்தநூல் தர்க்க நூலாகத் திகழ்வதோடு பிற சமயங் களைத் தாழ்த்தியும் சில பாடல்கள் பாடப்பட்டுள்ளன.

## காப்பியக்கதை

வணிக மரபில் தோன்றிய ‘குண்டலகேசி’ என்ற பத்தரை, அந்த நாட்டு அரசனால் கொலைக்குற்றம் சாற்றப்பட்டு சிறைச் சாலையில் இருந்த “காளன்” என்பவனைக் கண்டு காதல் கொண்டாள். தன் தந்தையின் உதவியால் தண்டனையில் இருந்து காளனை விடுவித்து, அவனையே திருமணம் செய்து கொண்டாள். இல்லற வாழ்வு மகிழ்ச்சியாகச் சென்று கொண்டிருக்கும் போது, ஒரு நாள் ஊடல் காரணமாக அவனைக் “கள்வன்” என்று திட்டினாள். அதனால் சினம் கொண்ட காளன், அவளை நயவஞ்சகமாக மலையுச்சிக்கு அழைத்துச் சென்று, கொலை செய்ய முற்படுகிறான். தற்கொல்லியை முற்கொல்ல வேண்டும் என்ற அடிப்படையில் அவனை (காளனை) மும்முறை வலம்

*வந்து வணங்கி, அவனை அறியாமல் மலையுச்சியிலிருந்து தள்ளிக் கொன்று விடுகிறாள். பின்னர் உள்ளம் வருந்தித் துறவு வாழ்க்கை மேற்கொண்டு, புத்த சமயத்தின் துறவியாக மாறி வாதத்தில் பிற சமயங்களை வென்று முக்தி அடைந்ததாக வசிய புராணத்தின் பாடல் ஒன்று எடுத்துக் கூறுகிறது.*

### சிறப்பியல்புகள்

1. *துன்பம் வரும் பொழுது அதனைத் தாங்கிக் கொள்ளும் மன இயல்பை அழகுத் தமிழில் வலியுறுத்தும் பாங்கு சிறப்பிற்குரியது.*

**"அறிவ தறிவார் அழுங்கார் உவவார்**
**உறுவது உறும் என்று உரைப்பது நன்று"**

*என்கிறது.*

2. *வாழ்வின் 'நிலையாமை'த் தன்மையைக் கற்பனை மிகுந்த கவித்துவ அழகோடு எடுத்துச் சொல்லும் பாடலொன்று அமரத்துவம் வாய்ந்தது.*

**"பாளையாம் தன்மை செத்தும் பாலனாம் தன்மை செத்தும்**
**காளையாம் தன்மை செத்தும் காமுறும் இளமை செத்தும்**
**மீளும்இவ் வியல்பு மின்னே மேல்வரும் மூப்புமாகி**
**நாளும் நாம் சாகின்றோமால் நமக்குநாம் அழாததென்னோ?"**

*என்கிறது.*

## உ. ஐஞ்சிறு காப்பியங்கள்

- *'ஐம்பெருங்காப்பியங்கள்' என்ற வழக்காற்றைப் பின்பற்றி ஐஞ்சிறு காப்பியங்கள் என்ற வழக்காறும் உருவாக்கப் பட்டிருக்கலாம்.*
- *அறம், பொருள், இன்பம், வீடு என்னும் நான்கு உறுதிப்பொருள் களுள் ஒன்றோ பலவோ குறைந்து வருவது சிறுகாப்பியமாகும்.*
- *நீலகேசி, உதயணகுமார காவியம், நாககுமார காவியம், சூளாமணி, யசோதர காவியம் என்னும் ஐந்தும் தமிழில் சிறுகாப்பியங்களாகும்.*
- *கி.பி. 13 அல்லது 14-ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த மயிலைநாதர் என்பவர் தான் முதன் முதலில் 'ஐஞ்சிறு காப்பியம்' என்ற தொடரைப் பயன்படுத்துகிறார்.*
- *ஐஞ்சிறு காப்பியங்கள் என்ற வழக்கு முதலில் சமணர்களால் வழங்கப்பட்டிருக்க வேண்டும் என்று கூறுகிறார் தெ. பொ. மீனாட்சி சுந்தரனார்.*

✴ பிற்காலத்தில் சி.வை. தாமோதரம் பிள்ளையும் இத்தொடரைக் கையாண்டார்.

✴ ஐஞ்சிறு காப்பியங்கள் ஐந்தும் சமண சமயம் சார்ந்த நூல்களாகும்.

***1. நீலகேசி:*** *பெயர்க்காரணம்:*

*நீலம் + கேசம் + கேசி = நீலகேசி*

| | |
|---|---|
| நீலம்: | கருமைநிறம் |
| கேசம்: | கூந்தல் |
| கேசி: | நீண்ட கூந்தலையுடையவள் |

*கருத்தக் கூந்தலையுடைய நீலகேசியின் வரலாற்றை எடுத்துச் சொல்லும் நூல் நீலகேசியாகும்.*

| | | |
|---|---|---|
| நூலாசிரியர் | : | பெயர்தெரியவில்லை |
| பாவகை | : | விருத்தப்பா |
| பாடல்கள் | : | 894 பாடல்கள் |
| சருக்கங்கள் | : | பத்து |
| காலம் | : | கி.பி. 5 அல்லது 6-ஆம் நூற்றாண்டு |
| சமயம் | : | சமணசமயம் |
| நூல்வகை | : | தருக்கநூல் (பௌத்த சமயத்திற்கு எதிரான நூல்) |
| சிறப்புப்பெயர்கள் | : | 1. நீலகேசித் திரட்டு, 2. நீலகேசித் தெருட்டு யாப்பெருங்கல விருத்தியுரை = இந்நூலை 'நீலம்' என்றழைக்கிறது. |

## நீலகேசியின் நூல் பொருள்

*பாஞ்சால நாட்டில் புண்டரவர்த்தனம் என்னும் நகருக்கு அருகிலுள்ள இடுகாட்டில் காளிக்கு உயிர்ப்பலி நடந்து வந்தது. முனிச்சந்திரர் என்னும் சமண முனிவர் தன் தவவலிமையால் உயிர்ப் பலியைத் தடுத்து நிறுத்தினார். இதனால் காளி முனிவர் மீது கோபம் கொண்டது.*

✴ பழையனூர் நீலி என்னும் பேய் காமலேகை என்னும் இளவரசி உருவில் முனிச்சந்திரனை மயக்க அனுப்பினாள்.

✴ பழையனூர் நீலி முனிவரிடம் தோற்றுப்போய் அவரிடமே மாணவியாக மாறினாள்.

- ✷ முனிவரிடம் சமண சமய உண்மைகளை அறிந்து கொண்டு சமண வாதியாக மாறுகிறாள்.
- ✷ பௌத்த சமயத்தைச் சார்ந்த குண்டலகேசி, அர்த்த சுந்தரரையும் ஆசிவகரையும், சாங்கியரையும் சொற்போரில் வென்று சமண சமயத்தைச் சார்ந்தவர்களாக்கினாள்.

### சிறப்புகள்

1. இந்நூல் கி.பி 7-ஆம் நூற்றாண்டில் தோன்றியிருக்கலாம் என்பது தெ. பொ. மீனாட்சி சுந்தரனாரின் கருத்தாகும். இந்தவுரையை 'சமயதிவாகரம்' என்றழைப்பர். மேருமந்திர புராணத்தை எழுதியவரும் வாமனமுனிவரேயாவர்.
2. குண்டலகேசிக்கு மறுப்பாக எழுந்த வாத நூல்.
3. காப்பியம் முழுமையும் பிறசமய எதிர்ப்பும், சமண சமயப் போற்றுதலுமே நிறைந்து காணப்படுகிறது.
4. பாலாலையம் என்னும் சுடுகாட்டில் பிணங்கள் அற்ற மாலைகள் தொங்குகின்றன. எரிந்த பிணங்களின் மண்டை ஓடுகள், எஞ்சிய எலும்புத் துண்டுகள், கரிந்த கொள்ளிக் கட்டைகள், கிழிந்து கிடக்கும் ஆடைகள், வளர்ந்து கிடக்கும் கள்ளிச் செடிகள் பார்ப்பவரை பயம் கொள்ளச் செய்வனவாகும்.

### 2. சூளாமணி

*பெயர்க்காரணம்:* மண்ணுலக வேந்தனான திவிட்டன், விண்ணுலக மங்கையான சுயம்பிரபையின் வரலாற்றைக் கூறும் நூல்.

மிகுந்த ஒளியினையுடைய சூளாமணி போல் திவிட்டனும், விசயனும் ஒளிர்ந்தமையால் இக்காப்பியம் சூளாமணி என்று பெயர் பெற்றது.

| | | |
|---|---|---|
| நூலாசிரியர் | : | தோலாமொழித் தேவர் |
| பாவகை | : | விருத்தப்பா |
| பாடல்கள் | : | 2330 பாடல்கள் |
| சருக்கங்கள் | : | 12 (நாட்டுச்சருக்கம் முதல் முக்திச் சருக்கம்) |
| காலம் | : | கி.பி. 7-ஆம் நூற்றாண்டு என்பார் தெ. பொ. மீனாட்சி சுந்தரனார் |
| சமயம் | : | சமணசமயம் |
| நூல்வகை | : | தழுவல் நூல் |

*ஸ்ரீபுராணம் எனப்படும் ஆருகத மாபுராணத்தைத் தழுவி எழுதப் பட்டது.*

## சூளாமணியின் நூல்பொருள்

*சுரமை நாட்டு மன்னன் பயாபதி. இவனுக்கு மனைவியர் இருவர். இவ்விருவரும் விசயன் - திவிட்டன் என்னும் இரு புதல்வரைப் பெறுகின்றனர்.*

*விஞ்சையர் தலைவன் அசுவகண்டன் தன்னிடம் பணியாத திவிட்டன் மீது கோபம் கொண்டு மாயசிங்கத்தைத் திவிட்டன் மீது ஏவுகிறான். திவிட்டனின் மாயம் கண்டு மாயச்சிங்கம் பயந்து ஓடி விடுகிறது. குகைக்குள்ளிருந்த உண்மைச் சிங்கத்தை வென்று வாகை சூடுகிறான் திவிட்டன்.*

*பின்னர் அசுவகண்டனின் மகளைத் திவிட்டன் மணக்கிறான். இவர்களுக்குச் சோதிமலை என்ற பெண்குழந்தைப் பிறக்கின்றது. அவள் அமுத சேனன் என்னும் மாமன்மகனை மணக்கிறாள்.*

*இறுதியில் உலக இன்பம் துறந்து துறவு வாழ்க்கை மேற்கொண்டு முக்தி பெறுகிறான்.*

*உலக வாழ்வின் நிலையாமையைத் தன்மையை*

**“ஆனது துரப்ப அரவுறை ஆழ்குழி**
**நானவிர் பற்றுபு நாலும் ஒருவனோர்**
**தேனின் அழிதுளி நக்கும் திறந்தது**
**மானுடர் இன்பம் மதித்தனை கொள் நீ”**

*என்று விளக்குகிறது.*

*மருத நிலத்தைப் பெண்ணாக உருவகம் செய்திருக்கும் அழகிய சந்தநயமிக்கப் பாடல்.*

**“வளர் தாமரை அல்லி மலர்த்தியகை**
**வளர் தாமரை அல்லி மயக்கும் ஒளி**
**வளர் தாமரை அல்லி மகிழ்ந்தாள் போல்**
**வளர் தாமரை அல்லி வனத் திடையாள்”**

*தாமரை மலரின் இதழ்களைப் போன்று மருதநில மகளின் கை, கால், மேனி எல்லாம் விளங்கத் தாமரைக் காட்டில் வசிக்கிறாள் என்று கூறுகிறது.*

## சிறப்புக்கள்

1. *சீவக சிந்தாமணிக்கு அடுத்தாற் போன்று காப்பியப் பெருமை வாய்ந்த நூல்.*

2. ஐஞ்சிறுகாப்பியங்களுள் காப்பியச் சுவைமிக்க நூல்.
3. டாக்டர் தமிழண்ணல் பாகவதமும் சூளாமணியும் கதை கூறும் போக்கில் ஒத்துக் காணப்படுகிறது என்கிறார்.
4. மு. வரதராசனார் - விருத்தப் பாவைக் கையாள்வதில் தோலா மொழித் தேவர் திருத்தக்கத் தேவரையும் மிஞ்சி விட்டார் என்கிறார்.
5. கி.வா. ஜகன்நாதன் - சிந்தாமணியைவிட செப்பமான நடையை உடையது சூளாமணி என்கிறார். பாகவதத்தில் வரும் கண்ணன் - பலராமன் போன்றே சூளாமணியில் விசயனும் -திவிட்டனும் சித்தரிக்கப்பட்டுள்ளனர்.
6. தெ.பொ. மீனாட்சி சுந்தரனார் - சிந்தாமணியிலும் கூட இத்தகைய ஒட்டமும் இனிமையும் இல்லை என்கிறார்.

## 3. யசோதர காவியம்

பெயர்க்காரணம்: உயிர்க்கொலை தீது, இசை காமத்தைத் தூண்டும் என்பதையும், சிற்றின்பத்தின் தீமையையும், பேரின்பத்தின் சிறப்பையும், ஒழுக்கத்தின் உயர்வினையும் விளக்கும் காப்பியமாகும்.

| | | |
|---|---|---|
| நூலாசிரியர் | : | வெண்ணாவலூர் உடையார் வேள் என்றும் ஆசிரியர். பெயர் தெரியவில்லை என்றும் இரு கருத்துக்கள் உள்ளன. |
| பாவகை | : | விருத்தப்பா |
| பாடல்கள் | : | 360 |
| சருக்கங்கள் | : | 5 |
| காலம் | : | கி.பி. 13-ஆம் நூற்றாண்டு |
| சமயம் | : | சமண சமயம் |
| நூல்வகை | : | தழுவல் காப்பியம் |

புட்பந்தர் எழுதிய யசோதர சரிதம் என்னும் நூலைத் தழுவி எழுதப்பட்டதாகும்.

## யசோதரகாவியத்தின் நூல் பொருள்

அவந்தி நாட்டு மன்னன் அசோகனின் மகன் யசோதரன். இவன் மனைவி அமிர்தமதி. இவள் யானைப்பாகன் பாடிய (மாளவ பஞ்சமம்) என்னும் இசையைக் கேட்டு, அவனுடன் தகாத உறவு கொள்கிறாள். உறவுக்குத் தடையாக இருந்த கணவனின் தாயான சந்திரமதிக்கும்

கணவனுக்கும் உணவில் நஞ்சிட்டுக் கொல்கிறாள். கொல்லப்பட்ட இருவரும் பல பிறவிகள் எடுத்து அபயருசி, அபயமதியாகப் பிறக்கின்றனர். இவர்களின் பிறவிக்கதையைக் கேட்ட உதயநாட்டு மன்னன் மாரிதத்தன் உயிர்க் கொலையின் தீமையை உணர்த்த துறவு வாழ்க்கை மேற் கொள்கிறான்.

### சிறப்புக்கள்

1. யசோதர காவியத்தில் பின்னோக்கு உத்தி முறை கையாளப் பட்டுள்ளது.
2. வடமொழியில் குணபத்திரர் எழுதிய உத்தரபுராணத்திலும் யசோதரன் கதை இடம் பெற்றுள்ளது.

## 4. உதயணகுமார காவியம்

பெயர்க்காரணம்: உதயணன் வரலாற்றைக் கூறுவதால் உதயண குமார காவியம் எனப் பெயர் பெற்றது.

| | | |
|---|---|---|
| நூலாசிரியர் | : | கந்தியார் (சமணப் பெண் துறவி) |
| பாவகை | : | விருத்தப்பா |
| பாடல்கள் | : | 369 |
| நூல் பிரிவு | : | |
| காண்டங்கள் - ஆறு | : | 1. உஞ்ஞைக் காண்டம்<br>2. இலாவாண காண்டம்<br>3. மகத காண்டம்<br>4. வத்தவ காண்டம்<br>5. நரவாண காண்டம்<br>6. துறவுக் காண்டம் |
| காலம் | : | கி.பி. 15-ஆம் நூற்றாண்டாக இருக்கலாம் என்பார் மது. ச. விமலானந்தம் அவர்கள் |
| சமயம் | : | சமணம் |
| நூல்வகை | : | தழுவல் நூல், பெருங்கதையில் வரும் உதயணன் வரலாற்றைத் தழுவி எழுதப் பட்டுள்ளது என்பர். |

### உதயண குமார காவியம் நூல் பொருள்

அவந்தி நாட்டு மன்னன் பிரச்சோதனன். இவன் மாய யானையின் மூலம் வத்தவநாட்டு கௌசாம்பி நகரத்து மன்னன் உதயணனைச்

சிறைப்படுத்துகிறான். உதயணனை அமைச்சர் யூகி சிறையிலிருந்து தப்ப உதவி செய்கிறான். பின்னர் உதயணன் நளகிரி என்னும் யானையை அடக்கிப் பிரச்சோதனன் மகள் வாசவதத்தைக்கு யாழ் கற்றுக் கொடுத்து காதல் செய்து, அவளை மணக்கிறான். இறுதியில் இல்லற வாழ்க்கையை வெறுத்துத் துறவு வாழ்க்கை மேற்கொள்கிறான்.

### சிறப்புக்கள்

1. இக்காப்பியம் காப்பியச் சுவையற்றது என்ற கருத்து பல அறிஞர் களின் கூற்றாக உள்ளது.

## 5. நாககுமார காவியம்

பெயர்க்காரணம்: காப்பியத் தலைவனான மகதநாட்டு மன்னன் நாககுமாரனின் வரலாற்றைக் கூறுவதால் நாககுமார காவியம் எனப் பெயர் பெற்றது.

| | | |
|---|---|---|
| நூலாசிரியர் | : | பெயர் தெரியவில்லை |
| பாவகை | : | விருத்தப்பா |
| பாடல்கள் | : | 170 |
| நூல் பிரிவு | : | சருக்கம் - 5 |
| காலம் | : | கி.பி. 16-ஆம்- நூற்றாண்டு என்பர் |
| சமயம் | : | சமணம் |
| பிறமொழியில் | : | நாககுமார சரிதம், நாகபஞ்சமி கதை என்றழைக்கப்படுகிறது. |

### நாககுமாரகாவியத்தின் நூல் பொருள்

மகத மன்னன் சிரேணிகன். அவன் மனைவி சாலினி. இவர்களுக்கு விபுலமலையில் வாழ்ந்த வரவீரநாத முனிவர் அறங்களைப் போதித்தார். சிரேணிகன் மேற்கொள்ள வேண்டிய நாகபஞ்சமி நோன்பு பற்றி முனிவர் விரிவாக எடுத்துரைத்தார். இதுவே நாககுமார காவியம் ஆகும்.

சயந்தரன் என்னும் அரசனின் இரண்டாவது மகன் பிரதாபந்தன் இவனே நாககுமாரன் என்றழைக்கப்பட்டான்.

### சிறப்புக்கள்

1. மறைந்து போனதாகக் கருதப்பட்ட இக்காப்பியத்தைக் காப்பியங்கள் நூலை எழுதிய எஸ். சௌந்திரபாண்டியன் கி.பி. 1973-ஆம் ஆண்டு

*சென்னைப் பல்கலைக் கழகத்தின் தமிழாய்வு இதழ் மூலமாக முதன் முதலில் வெளியிட்டார்.*

2. *ச.விமலானந்தம் இக்காப்பியம் காவிய அமைதியோ, கவிநயமோ எதுவுமில்லாத சொத்தை நூல் என்கிறார்.*

## காப்பியச் சிறப்புகள்

- *ஐம்பெரும் காப்பியங்களில் சிலப்பதிகாரம், சீவகசிந்தாமணி, வளையாபதி*
- *ஐஞ்சிறு காப்பியங்களில் நீலகேசி, சூளாமணி, யசோதரகாவியம், உதயணகுமார காவியம், நாககுமார காவியம் ஆகிய எட்டும் - சமணம் சார்ந்த காப்பியங்கள்.*
- *மணிமேகலை, குண்டலகேசி - பௌத்தசமயம் சார்ந்த காப்பியங்கள்*
- *சிலப்பதிகாரம், மணிமேகலை - இரட்டைக்காப்பியங்கள்*
- *சிந்தாமணி, வளையாபதி, குண்டலகேசி, நீலகேசி, சூளாமணி, யசோதரகாவியம், உதயணகுமார காவியம், நாககுமார காவியம் - ஆகிய எட்டும் விருத்தப்பாவில் பாடப்பட்டதாகும்.*
- *சிலப்பதிகாரம், மணிமேகலை - ஆசிரியப்பாவிலும், வெண்பாவிலும் பாடப்பட்டது.*
- *சூளாமணி, யசோதர காவியம், உதயண குமார காவியம் ஆகிய மூன்றும் தழுவல் காப்பியங்கள்.*
- *நீலகேசி - தருக்க நூலாகும்.*

# 4. சைவ - சமய இலக்கியங்களின் தோற்றம்

*சங்ககாலம், சங்கம் மருவிய காலத்தையும் அடுத்துள்ளக் காலம் பக்தி இயக்க காலமாகும். இறைவனையும், இறையடியார்களையும் பாடிய காலகட்டமே பல்லவர் காலமாகும். இறைவன் மீது உண்மையான இறை பக்தியுடைய பக்தர்கள் உள்ளம் உருகி வழிபாடு செய்து பாடிய இசைப்பாடல்களே பக்திப்பாடல்கள் என்றழைக்கப்பட்டது. இறைவன் மீதுள்ள பக்தி மேலீட்டால் உள்ளம் ஆனந்தம் அடைந்து, ஆலயம் தொழுது, இறைவனை இசைபாடி வழிபட்டனர். இந்தப் பக்தி எழுச்சியால் தமிழகம் முழுவதுமே பக்தி இயக்கம் வளரத் தொடங்கியது. மறைதிரு தனிநாயகம் அடிகளார் ஆங்கிலம் வணிகத்தின் மொழி, இலத்தின் சட்டத்தின் மொழி, கிரேக்கம் இசையின் மொழி, ஜெர்மன் தத்துவத்தின் மொழி, பிரெஞ்சு தூதின் மொழி, இத்தாலி காதலின் மொழியென்று கூறுவது சரியெனின் தமிழை பக்தியின் மொழியென்றும் கூறுவது சரியே ஆகும் என்றார்.*

**காலம்**

*“இறை ஆலயப்பணியே இறைவன் பணி” என்ற சிந்தனை வேரூன்றிய கி. பி. 7, 8, 9-ஆம் நூற்றாண்டில் தான் பக்தி இயக்கம் தமிழகத்தில் வேரூன்றியது.*

## சைவம் வளர்த்த தமிழ்

*சைவ சமயம் மிகவும் தொன்மை வாய்ந்தது. சிவபெருமானை முழுமுதற் கடவுளாகக் கொண்ட சமயம் சைவ சமயமாகும். ‘சிவம்’ என்ற சொல்லுக்கு செம்மை, நன்மை என்று பொருளாகும். “சேயோன் மேய மைவரை யுலகமும்” என்ற தொல்காப்பிய நூற்பா சைவ சமயம் மிகவும் தொன்மையான சமயம் என்பதற்கான சான்றாகக் கருதப்படுகிறது. சங்க இலக்கிய நூலான பரிபாடல், மற்றும் திருமுருகாற்றுப்படை போன்ற இலக்கியங்களில் சைவ சமயம் பற்றிய சிந்தனைகள் நிரம்பக் காணப்படினும், தேவாரம், திருவாசகம், போன்ற பக்தி இலக்கிய நூல்கள் தோன்றி தமிழ்மொழியை வளப்படுத்தியதோடு, தமிழர்களின் பண்பாட்டையும் காத்தது எனலாம்.*

## சைவத் திருமுறைகள்

*அறுபத்துமூன்று நாயன்மார்கள் இறைவனைப் புகழ்ந்து பாடிய திருநூல்கள் 'திருமுறை' என்றழைக்கப்பட்டது. திரு + முறை = திருமுறை. 'திரு' என்றால் 'மேன்மையான' என்று பொருள். முறை என்றால் நூல். என்று பொருள் இறைவனைப் புகழ்ந்து பாடிய மேன்மையான நூலே திருமுறைகளாகும். சைவத் திருமுறைகள் பன்னிரண்டாகும். தமிழின் உயிரெழுத்து பன்னிரண்டைப் போல சைவ சமயத்தின் உயிர் நூல்கள் பன்னிரு திருமுறைகளாகும்.*

## திருஞானசம்பந்தர்

1. *திருஞானசம்பந்தர் பாடிய தேவாரத் திருப்பதிகங்கள் முதல் மூன்று திருமுறைகளாக அமைந்துள்ளன.*
2. *சீர்காழிப்பதியில், அந்தணர்குலத்தில், சிவபாத இருதயாருக்கும், பகவதியம்மையாருக்கும் மகனாகப் பிறந்தவர்.*
3. *இவருடைய இயற்பெயர் ஆளுடையப் பிள்ளை.*
4. *பால் மணம் மாறாதக் குழந்தைப் பருவத்திலேயே உமையம்மையால் ஞானப்பால் ஊட்டப்பட்டவர்.*
5. *ஞானப்பால் ஊட்டப்பட்டதால் 'ஞானசம்பந்தர்' என்றழைக்கப் பட்டவர்.*
6. *மூன்று வயதிலேயே இறைஞானம் பெற்று 'தோடுடைய செவியன்' என்னும் பதிகத்தைப் பாடியவர்.*
7. *இவரின் காலம் கி.பி. 7-ஆம் நூற்றாண்டு என்பர்.*
8. *சம்பந்தர் பாடியப் பதிகங்களின் எண்ணிக்கை 16,000 என்கிறார் நம்பியாண்டார் நம்பி. ஆனால் தற்போது 384 பதிகங்கள் மட்டுமே கிடைக்கின்றது.*
9. *யாழ்முரிப்பண் இசைத்து இறைவனைப் பாடிய பெருமையுடைய சம்பந்தரை 'நாளும் இன்னிசையால் தமிழ் பரப்பும் ஞானசம்பந்தன்' என்று சுந்தரர் புகழ்ந்து பாடினார். இவரின் பாடல்களில் மட்டும் 23 பண்கள் பயின்று வந்துள்ளது.*
10. *பெரிய புராணத்தில் இவரின் பாடல்கள் அதிகமாக இடம் பெறுவதால் பிள்ளை பாதி, புராணம் பாதி என்று சம்பந்தரின் பாடல்களைப் புகழ்ந்துரைப்பர்.*

11. இவர் பாடிய திருமுறைகள் 'திருக்கடைக் காப்பு' என்ற சிறப்பு பெயரோடு அழைக்கப்படுகிறது.

12. ஞானசம்பந்தரை ஆதிசங்கரர் 'திராவிட சிசு' என்று குறிப்பிடுகிறார். இவருக்கு காழி வள்ளல், பரசமயகோளரி, திருஞானம் பெற்ற ஆளுடைய பிள்ளை என்ற சிறப்புப் பெயரும் இட்டு அழைப்பர்.

13. திருநாவுக்கரசரை 'அப்பர்' என்றழைத்தப் பெருமைக்குரியவர் ஞானசம்பந்தர்.

14. 22 சிவத்திருத்தலங்களுக்குச் சென்று இறைவனை வழிபட்டவர்.

15. இறைவனோடு மகன் உறவு பூண்டவர் என்பதால் சைவசமயத்தினர் இவரை சத்புத்திரர் என்றும், இவரின் பக்தி மார்க்கத்தை சத்புத்திர மார்க்கம் என்றும், இவரின் பக்தி நெறியை 'கிரியை நெறி' என்றும் அழைத்தனர்.

16. திருவாரூர் பதிகத்தில் நிலையாமைத் தன்மையினை "தந்தையார் போயினார், தாயாரும் போயினார், தாமும் போவார் கொந்தவேல் கொண்டதொரு கூற்றத்தாரும் பார்க்கின்றார், கொண்டு போவார்" என்கிறார்.

17. நாளும் கோளும் அடியவர்களுக்கு ஒன்றும் செய்வதில்லை என்ற பகுத்தறிவு சிந்தனையை ஊட்டிய பாடல்.

**"வேயுறு தோளி பங்கன் விடமுண்ட கண்டன்**
**மிகநல்ல வீணை தடவி**
**மாசறு திங்கள் கங்கை முடிமேல் அணிந்தென்**
**உளமே புகுந்த அதனால்**
**ஞாயிறு திங்கள் செவ்வாய் புதன் வியாழன் வெள்ளி**
**சனிபாம்பு இரண்டும் உடனே**
**ஆசறு நல்லநல்ல அவை நல்ல நல்ல**
**அடியார் அவர்க்கு மிகவே"**

எனக் கூறி சாதி வேறுபாடு, தீண்டாமையை ஒழிக்கப் பாடுபட்டவர்.

## திருநாவுக்கரசர்

1. திருநாவுக்கரசர் பாடிய தேவாரத் திருப்பதிகங்கள் நான்கு, ஐந்து, ஆறாம் திருமுறைகளாகத் தொகுக்கப்பட்டுள்ளது.

2. திருமுனைப்பாடி நாட்டில், திருவாமூரில் புகழனாருக்கும் மாதினியாருக்கும் மகனாகப் பிறந்தார்.

3. இவருடைய இயற்பெயர் மருள்நீக்கியார்.

4. இளமையான வயதிலே பெற்றோரை இழந்தமையால் சகோதரி திலகவதியால் வளர்க்கப்பட்டார்.

5. இளமையில் தருமசேனர் என்ற பெயருடன் சமண சமயத்தைச் சார்ந்து சில காலம் வாழ்ந்தார். தமக்கையின் அருள் திறத்தாலும், சூலை (வெம்மை) நோயின் தாக்குதலுக்குப் பிறகு சைவ சமயத்திற்குத் திரும்பினார்.

6. இவரின் காலம் கி.பி. ஏழாம் நூற்றாண்டு என்பர்.

7. நாவுக்கரசர் பாடியப் பாடல்கள் 49000 என்பர். ஆனால், இன்று கிடைப்பதோ 313 பதிகங்கள் மட்டுமேயாகும்.

8. திருநாவுக்கரசரின் பாடல்களில் பத்து பண்கள் உள்ளன என்பர்.

9. தேவாரம் பாடிய மூவரில் அதிகம் வாழ்ந்தவர் திருநாவுக்கரசர். 81 ஆண்டுகள் வரை வாழ்ந்த அடியவர்.

10. திருநாவுக்கரசரைப் பல்வேறு புனைப்பெயர் கொண்டு அழைப்பர். உழவாரப் படையாளி - கோயில்களில் உழவாரப் பணி மேற்கொண்டதால், வாசீகீரர் - கோயில்களில் இனிமையான நற்கருத்துக்களைப் பாடியதால். தாண்டக வேந்தர் - 'தாண்டகம்' என்னும் பாவகையை சிறப்பாகப் பாடியதால். அப்பர் - திருஞான சம்பந்தரைத் தோளில் தூக்கி சுமந்ததால்.

11. இறைவனின் முன்பு தன்னை வேலையாளாகக் கருதியதால் இவரின் மார்க்கம் தாசமார்க்கமாகும்.

12. மகேந்திரவர்மப் பல்லவனை சமண சமயத்திலிருந்து சைவ சமயத்திற்கு மாற்றியவர்.

13. 'என் கடன் பணி செய்து கிடப்பதே' என்ற கொள்கையில் உறுதியாக நின்றவர்.

14. இவர் பாடியப் பாடல்களைத் திருக்குறுந்தொகை, திருத்தாண்டகம் என்ற நூலாகக் கருதுகின்றனர்.

15. 'மனித குலம் அனைத்தும் ஒன்று' என்ற கருத்தின் மிகுதியால்,

> "சாத்திரம் பலபேசும் சழக்கர்காள்
> கோத்திரமும் குலமும் கொண்டு என்செய்வீர்?"

என்று பாடினார்.

16. மகேந்திரவர்மப்பல்லவன் திருநாவுக்கரசரை சுண்ணாம்பு நீற்றறையில் இட்டு துன்புறுத்தியபோது.

"மாசில் வீணையும் மாலை மதியமும்
வீசு தென்றலும் வீங்குஇள வேனிலும்
மூசு வண்டறை பொய்கையும் போன்றதே
ஈசன் எந்தை இணையடி நீழலே"

என்று பாடினார்.

17. திருத்தாண்டகப் பாட்டில் "எல்லாம் இறைவன் செயல்" என்பதை

"ஆட்டுவித்தால் ஆர்ஒருவர் ஆடா தாரே
    அடக்குவித்தால் ஆர்ஒருவர் அடங்கா தாரே
ஓட்டுவித்தல் ஆர்ஒருவர் ஓடா தாரே
    உருகுவித்தால் ஆர்ஒருவர் உருகா தாரே
பாட்டுவித்தால் ஆர்ஒருவர் பாடா தாரே
    பணிவித்தால் ஆர்ஒருவர் பணியா தாரே
காட்டுவித்தால் ஆர்ஒருவர் காணா தாரே
    காண்பார்ஆர் கண்ணுதலாய் காட்டாக் காலே"

என அழகுறப் பாடுகிறார்.

18. 'தமிழோடு இசைப்பாடல் மறந்தறியேன்' என்றவர்.

## சுந்தரர்

1. சுந்தரர் பாடிய தேவாரத் திருப்பதிகங்கள் ஏழாம் திருமுறையாகத் தொகுக்கப்பட்டுள்ளது.
2. திருமுனைப்பாடி நாட்டில், திருநாவலூரில் சடையனாருக்கும் இசைஞானியாருக்கும் மகனாகப் பிறந்தார்.
3. இவரின் இயற்பெயர் ஆரூரர்.
4. நரசிங்க முனையரையர் என்னும் குறுநில மன்னரால் தத்தெடுக்கப்பட்டு வளர்க்கப்பட்டவர்.
5. இவரின் காலம் 7-ஆம் நூற்றாண்டின் இறுதிப் பகுதியும் எட்டாம் நூற்றாண்டின் முதல் பகுதியுமாகும்.
6. சுந்தரர் பாடிய பாடல்களின் எண்ணிக்கை 38,000 ஆகும். ஆனால் இன்று 1026 பாடல்களே கிடைக்கின்றன.
7. இவரின் பாடல்கள் 'திருப்பாட்டு' என்றழைக்கப்படுகிறது.
9. திருவாரூரில் பரவைநாச்சியாரையும், திருவெற்றியூரில் சங்கிலி நாச்சியாரையும் மணந்து கொண்டார்.

10. புத்தூர் சடங்கவிச்சிவாச்சாரியார் மகளை 16-வது வயதில் மணம் செய்ய இருந்த போது, மணமேடையில் இறைவனால் தடுத்தாழப் பட்டவர்.

11. சுந்தரரின் பாடல்களில் 18 பண்கள் உள்ளதாகக் கூறுவர்.

12. சுந்தரர் பாடிய 'திருத்தொண்டர் தொகை'யே பெரியபுராணத்திற்கு முதல் நூலாக அமைந்தது குறிப்பிடத்தக்கது.

13. சுந்தரரை 'வன்தொண்டர்' - (இறைவனை வன்சொற்களால் பேசியதால்), இறைவனுடன் தோழமை உறவு கொண்டதால் - தம்பிரான் தோழர், திருநாவலூரில் பிறந்ததால் திருநாவலூரரார் என்றும் அழைப்பர்.

14. சுந்தரரின் முதல் பதிகப் பாடலான

**"பித்தா பிறைசூடி பெருமானே அருளாளா**
**எத்தான் மறவாதே நினைக்கின்றேன் மனத்துன்னை"**

என்ற பாடலும், இறைவனின் அழகுச் சிறப்பை

**"பொன்னார் மேனியனே புலித்தோலை அரைக்கசைத்து**
**மின்னார் செஞ்சடைமேல் மிளிர்கொன்றை அணிந்தவனே**
**மன்னே மாமணியே மழபாடியுள் மாணிக்கமே**
**அன்னே உன்னையல்லால் இனியாரை நினைக்கேனே"**

என்று அழகுற பாடினார்.

15. சுந்தரரின் மார்க்கம் சகமார்க்கமாகும். நெறி யோக நெறியாகும்.

### மாணிக்கவாசகர்

1. மாணிக்க வாசகரின் நூல்கள் எட்டாம் திருமுறையாகத் தொகுக்கப் பட்டுள்ளது.
2. திருவாதவூரில் பிறந்தவர். இவரின் இயற்பெயர் தெரியவில்லை.
3. இவர் பாடிய திருவாசகமும், திருக்கோவையாரும் எட்டாம் திருமுறை நூற்களாகும்.
4. அரிமர்த்தன பாண்டியனிடம் அமைச்சராக இருந்தவர்.
5. இவரின் காலம் 9-ஆம் நூற்றாண்டு என்பர்.
6. இவ்வுலகில் 32 ஆண்டுகள் மட்டுமே வாழ்ந்த சிவ அடியார்.
7. திருவாசகம் சிவபுராணம் முதல் அச்சோப்பதிகம் இறுதியாக 659 பாடல்களைக் கொண்டதாகும்.

8. திருவாசகம் நாட்டுப்புற பாடல் வடிவில் பொற்கண்ணம் இடித்தல், அம்மானை ஆடல், ஊசல் ஆடல் போன்றவற்றை எடுத்துக் கூறுகிறது.

9. திருவாசகத்திற்கு உருகார் ஒரு வாசகத்திற்கும் உருகார் என்று கூறியவர் ஜி.யு. போப், திருவாசகத்தை ஆங்கிலத்தில் மொழி பெயர்த்தவரும் இவரே.

10. இராமலிங்க வள்ளலார் திருவாசகத்தின் இனிமையை,

> **“மாணிக்க வாசக நின்வா சகத்தை**
> **யான்கலந்து பாடுங்கால் நற்கருப்பஞ் சாற்றினிலே**
> **தேன்கலந்து பால்கலந்து செழுங்கனித் தீஞ்சுவை கலந்து**
> **ஊன்கலந்து உயிர்கலந்து உவட்டாமல் இனிப்பதுவே”**

என்று புகழ்ந்து பாடினார்.

11. இறைவனின் திருவருளை, தொண்டுள்ளத்தை

> **“உற்றாரை யான் வேண்டேன்; ஊர் வேண்டேன்; பேர் வேண்டேன்.**
> **கற்றாரை யான் வேண்டேன் கற்பவையும் இனி அமையும்”**

என்று புகழ்ந்து பாடியுள்ளார்.

12. இறைவனின் கருணையை வானாகி, மண்ணாகி, வளியாகி, ஒளியாகி விளங்குபவன் என்று போற்றுகிறார்.

13. திருக்கோவையார் 400 அகத்துறைப் பாடல்களைக் கொண்டது.

14. கோவை சிற்றிலக்கியத்தின் முதல் நூல் இதுவாகும்.

15. ‘பாவை பாடிய வாயால் ஒரு கோவை பாடுக’ என இறைவன் கேட்டதற்கு இணங்க இந்நூல் பாடப்பட்டதாகவும் கூறுவர்.

16. திருவாதவூரில் பிறந்ததால் - திருவாதவூரார் என்றும், மாணிக்கம் போன்ற பாடல்களைப் பாடியதால் மாணிக்கவாசகர் என்றும் அழைக்கப்பட்டார். அரிமர்த்தனப் பாண்டியன் ‘தென்னவன் பிரம்மராயன்’ என்னும் பட்டத்தை அளித்து சிறப்பித்தான்.

17. இவரின் மார்க்கம் சன்மார்க்கமாகும்.

## ஒன்பதாம் திருமுறை

1. திருமாளிகைத்தேவர், கருவூர்த்தேவர், சேந்தனார், பூந்துருத்திகாடவநம்பி, கண்டராதித்தர், வேணாட்டடிகள், திருவாலி அமுதனார், புருடோத்தம நம்பி, சேதிராயர் ஆகிய ஒன்பதுபேர் பாடிய 29 பதிகங்களும் ஒன்பதாம் திருமுறை என்று அழைக்கப்படுகிறது.

2. 29 பதிகத்திலும் 301 பாடல்கள் உள்ளன.
3. காலம் கி. பி. 10 மற்றும் 11-ஆம் நூற்றாண்டாகும்.
4. இத்திருமுறை நூல்கள் திருவிசைப்பா, திருப்பல்லாண்டு என அழைக்கப்படுகிறது.

## திருமூலர் (பத்தாம் திருமுறை)

1. திருமூலரின் திருமந்திரம் பத்தாம் திருமுறையாகக் வைத்துப் போற்றப்படுகிறது.
2. திருமூலர் வடநாட்டைச் சார்ந்த சிவயோகி.
3. திருமந்திரம் ஒன்பது தந்திரங்களையும், 232 அதிகாரங்களையும் உடையதாகும்.
4. திருமந்திரம் 3000 பாடல்களைக் கொண்டது. அதனால் இந்நூலுக்கு தமிழ் மூவாயிரம் என்ற சிறப்பு பெயரும் உண்டு.
5. திருமூலர் கூடுவிட்டு கூடுபாயும் திறன் பெற்ற சித்தர் மரபினர் எனவும் கருதுவதுண்டு.
6. தோத்திரத்திற்குத் திருவாசகம், சாத்திரத்திற்குத் திருமந்திரம் என்று அழைக்கும் சிறப்புடையது.
7. ‘‘என்னை நன்றாக இறைவன் படைத்தனன்
   தன்னை நன்றாகத் தமிழ்செய்யு மாறே’’

என்று புகழ்ந்து பாடியவர்.

8. அன்பேசிவம், ஒன்றேகுலம் ஒருவனே தேவன் போன்ற புகழ்பெற்றத் தொடர் திருமந்திரச் சொற்றொடர்களேயாகும்.
9. திருமந்திரத்தில்

‘‘யான் பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம்’’
‘‘உள்ளம் பெருங்கோயில் ஊனுடம்பு ஆலயம்’’
‘‘நன்றே நினையுமின் நமனில்லை’’
‘‘உடம்பால் அழியின் உயிரார் அழிவர்
திடம்பட மெய்ஞ்ஞானம் சேரவும்மாட்டார்’’

என்றும், இறைவன் இல்லாத இடமில்லை என்பதை,

‘‘தேனுக்குள் இன்பம் சிவப்போ? கறுப்போ
வானுக்குள் ஈசனைத் தேடும் மதியிலீர்!

தேனுக்குள் இன்பம் செறிந்திருந்தாற் போல்
ஊனுக்குள் ஈசன் ஒளிந்திருந்தானே"

*என எளிமையாக விளக்குகிறார்.*

## பதினோராம் திருமுறை

1. *பதினோராம் திருமுறையைப் பன்னிருவர் பாடியுள்ளனர்.*
2. *பன்னிருவர் பாடிய நாற்பது நூல்கள் பதினோராம் திருமுறையாகத் தொகுக்கப்பட்டுள்ளது.*
3. *திருவாலவாயுடையாரின் திருமுகப்பாசுரம், காரைக்கால் அம்மையாரின் அற்புதத் திருவந்தாதி, திருப்பதிகங்கள், திருஇரட்டைமணிமாலை, கால்லாடதேவநாயனார், நக்கீரர், கபிலதேவநாயனார், பரணதேவ நாயனார், அதிராஅடிகள், எம்பெருமான் அடிகள், ஐயடிகள் காடவர்கோன், சேரமான் பெருமாள்நாயனார், பட்டினத்தடிகள், நம்பியாண்டார்நம்பி பாடிய நூல்களே பதினோராம் திருமுறையாகும்.*
4. *இத்திருமுறைக்குப் 'பிரபந்தமாலை' என்ற சிறப்புப் பெயரும் உண்டு.*

## பன்னிரண்டாம் திருமுறை

1. *சேக்கிழாரின் பெரியபுராணம் பன்னிரண்டாம் திருமுறையாகும்.*
2. *நம்பியாண்டார் நம்பி தொகுத்த 11-ஆம் திருமுறைகளோடு பின் வந்த சான்றோர் பெரியபுராணத்தையும் சேர்த்து பன்னிரு திருமுறை களாகத் தொகுத்தனர். சேக்கிழார் இந்நூலுக்குத் திருத்தொண்டர் புராணம் என்றே பெயரிட்டார்.*
3. *சுந்தரர் பாடிய (11 பாடல்கள்) திருத்தொண்டத் தொகையையும், நம்பியாண்டார் நம்பி பாடிய (89 பாடல்கள்) திருத்தொண்டர் திருவந்தாதியும், பெரியபுராணம் இயற்றுவதற்கு அடிப்படை நூல்களாக விளங்கியது.*
4. *இந்நூலை சார்பு நூல், தொகை விரி என்ற சிறப்புப் பெயராலும் அழைப்பதுண்டு.*
5. *தொண்டை நாட்டைச் சார்ந்த குன்றத்தூரில் கி.பி. 12-ஆம் நூற்றாண்டில் சேக்கிழார் பிறந்தார். இவரின் இயற்பெயர் அருண்மொழித் தேவர். சேக்கிழார் என்பது குடிப்பெயராகும். கல்வெட்டுகள் இவரை 'இராமதேவர்' என்று குறிப்பிடுகிறது.*
6. *பெரியபுராணம் 13 சருக்கங்களையும், 4286 விருத்தப்பாக்களையும் உடையது.*

7. 63-நாயன்மார்களின் வரலாற்றையும் தொகுத்துச் சொல்லும் நூல்.

8. சேக்கிழாருக்கு இறைவனே ‘உலகெலாம்’ என அடியெடுத்து கொடுத்து பின்னரே சேக்கிழார் பெரிய புராணத்தைப் பாடினார் என்பர்.

9. பெரியபுராணத்தின் பக்திச் சுவையில் மூழ்கி முத்தெடுத்த மகாவித்வான் மீனாட்சி சுந்தரம் பிள்ளை, சேக்கிழாரை “பக்திச் சுவை நனி சொட்டச் சொட்டப் பாடிய கவிவலவ” என புகழாரம் சூட்டுகிறார்.

10. பெரியபுராணம் பக்தியிலக்கியக் கால தமிழகமக்களின் வாழ்க்கையையும், பண்பாட்டையும், பழக்கவழக்கத்தினையும் விளக்கும் வரலாற்று காப்பியமாகும்.

11. சுந்தரர் பாடிய 61 நாயன்மாரின் வரலாற்றோடு சுந்தரரின் வரலாற்றையும், சுந்தரரின் தாய் தந்தையாரின் வரலாற்றையும் இணைத்து சேக்கிழார் 63 நாயன்மார்களின் வரலாற்றைப் பெரிய புராணமாகப் பாடினார்.

12. பெரிய புராணத்தில் பக்திச் சுவையோடு அழகிய இயற்கை வருணனையும் இரண்டறக் கலந்து பாடப்பட்டுள்ளது.

> **“காடெல்லாம் கழைக்கரும்பு காவெல்லாம் குழைக்கரும்பு**
> **மாடெல்லாம் கருங்குவளை வயலெல்லாம் நெருங்குவளை**
> **கோடெல்லாம் மடவன்னம் குளமெல்லாம் கடலன்னம்**
> **நாடெல்லாம் நீர்நாடு தனைஒவ்வா தலமெல்லாம்”**

13. பெரியபுராணத்தைத் தில்லையில் அரங்கேற்றம் செய்தபோது, அதைக் கேட்டு மகிழ்ந்த மன்னன் ‘சேக்கிழாருக்குத் தொண்டர் சீர் பரவுவார்’ என்ற பட்டமளித்துச் சிறப்பித்தான்.

14. இக்காப்பியம் 63 தனியடியார்கள், 9 தொகை அடியார் பற்றி குறிப்பிடுவதால் அ. ச. ஞானசம்பந்தன் ‘தேசியக் காப்பியம்’ என்று சிறப்பித்துக் கூறினார்.

பெரிய புராணத்தில் பொதுவாகப் பல திறப்பட்ட சுவைகள் சிறப்பாக வெளிப்பட்டாலும், சிறப்பாகப் பக்தி சுவை நன்கு வெளிப்படுகிறது. பெரியபுராணம் பக்தியை உயிராகவும், பிறவற்றை உடலாகவும் கொண்ட பெருங்காப்பிய வகைகளில் ஒன்றாகக் கருதலாம்.

# வைணவம் – வளர்த்த தமிழ்

*திருமாலை முழுமுதற் கடவுளாகக் கொண்ட சமயம் வைணவமாகும். தமிழகத்தில் சிவநெறியும், திருமால் நெறியும் நிலவழிபாட்டு அடிப்படையை உடையன ஆகும். வரலாற்றுக் காலத்துக்கு முற்பட்ட அடிப்படை உடையன. "மாயோன் மேய காடுறை உலகமும்" என்ற தொல்காப்பிய - நூற்பாவால் திருமால் வழிபாடு மிகப் பழங்காலத்திலிருந்தே தமிழ்நாட்டில் வழக்கிலிருந்து வருவதை அறியலாம். எனினும் கி.பி. 600 முதல் 900 வரையுள்ள காலத்தில் சைவ சமயத்திற்கு இணையாகத் தமிழ்நாட்டில் வைணவ வழிபாடு வளர்ச்சியடைந்தது.*

*வைணவ பக்தி மார்க்கத்தை தமிழ்நாட்டில் மக்களிடையே பரப்பியவர்கள் பன்னிரு ஆழ்வார்கள் ஆவார்கள். பன்னிரு ஆழ்வார்களும் 108 வைணவத் திருத்தலங்களைப் பற்றி புகழ்ந்து பாடிய பாடல்களை நாதமுனிகள் "நாலாயிர திவ்யப் பிரபந்தம்" என்று தொகுத்து உள்ளார். நாதமுனிகளுக்குப் பின்வந்த வைணவ அடியார்கள் ஆச்சாரியார்கள் ஆவர்.*

## பன்னிரு ஆழ்வார்கள்

*வைணவ நெறியைத் தமிழகம் எங்கும் பரப்பியவர்கள் பன்னிரு ஆழ்வார்கள். அவர்களுள் பொய்கையாழ்வார், பூதத்தாழ்வார், பேயாழ்வார் ஆகிய மூவரையும் முதலாழ்வார்கள் என்றழைப்பர். இவர்கள் காலத்தால் முற்பட்டவர்கள் ஆவர்.*

### 1. பொய்கையாழ்வார்

1. *காஞ்சிபுரத்தில் பிறந்தவர்.*
2. *திருவஃகா என்ற இடத்திலுள்ள பொய்கையிலுள்ள தாமரைமலரில் பிறந்ததால் பொய்கையாழ்வார் என்றழைக்கப்பட்டார்.*
3. *இவர் திருமாலின் சங்காகிய பாஞ்ச சன்னியத்தின் அவதாரம்.*
4. *இவர் பாடிய பக்திப் பாசுரங்கள் 100.*
5. *இதனை முதல் திருவந்தாதி என்றழைத்தனர்.*
6. *திருமாலின் புகழை,*

**“வையந் தகளியா வார்கடலே நெய்யாக**
**வெய்யக் கதிரோன் விளக்காகச் - செய்ய**
**சுடராழி யானடிக்கே சூட்டினேன் சொல்மாலை**
**இடராழி நீங்குகவே”**

*என்று புகழ்ந்து பாடியுள்ளார்.*

## 2. பூதத்தாழ்வார்

1. *மாமல்லபுரத்தில் பிறந்தவர். இவ்வூருக்கு திருக்கடல் மல்லை என்றும் பெயர் உண்டு.*
2. *பூதம் என்ற சொல் பலப் பாடல்களில் வருமாறு பாடிய காரணத்தால் பூதத்தாழ்வார் எனப்பட்டார்.*
3. *இவர் கதாயுதத்தின் அவதாரம்.*
4. *குருக்கத்தி (மாதவி) மலரில் தோன்றியவர்.*
5. *இவர் பாடிய பக்திப் பாசுரங்கள் 100.*
6. *இவர் பாடியதை இரண்டாம் திருவந்தாதி என்றழைத்தனர்.*
7. *இவர் திருமாலைப் புகழ்ந்து பாடிய பாடல்.*

**“அன்பே தகளியா யார்வமே நெய்யாக**
**இன்புருகுஞ் சிந்தை யிடுதிரியாய் - நன்புருகி**
**ஞானச் சுடர்விளக் கேற்றினேன் நாரணற்கு**
**ஞானத் தமிழ்புரிந்த நான்”**

*என்று புகழாரம் சூட்டுகிறார்.*

## 3. பேயாழ்வார்

1. *சென்னை மயிலாப்பூரில் பிறந்தவர்.*
2. *பக்தி பரவசத்தால் நெஞ்சம் சோர்ந்து, கண் சுழன்று, அழுது, சிரித்து ஆடிப்பாடிப் பேய் பிடித்தாற் போல் திருமாலைத் தொழுது பாடியமையால் இவர் பேயாழ்வார் என்றழைக்கப் பட்டார்.*
3. *இவர் திருமாலின் கந்தகம் என்னும் வாளின் அம்சம்.*
4. *செவ்வல்லிப் பூவில் தோன்றியவர்.*
5. *இவர் பாடிய பக்திப் பாசுரங்கள் 100.*
6. *இவர் பாடியது மூன்றாம் திருவந்தாதி.*

7. திருமாலின் திருக்கோலத்தை,

**“திருக்கண்டேன் பொன்மேனி கண்டேன் திகழும்**
**அருக்கன் அணிநிறமும் கண்டேன்”**

என்று பாடுகிறார். இந்த மூவரையும் முதலாழ்வார்கள் என்பர். இவர்கள் மூவரும் ஐப்பசி மாதத்தில் அடுத்தடுத்த நாளில் தோன்றினர் என்பர்.

## 4. திருப்பாணாழ்வார்

1. சோழநாட்டின் உறையூரில் பிறந்தவர்.
2. கார்த்திகை மாதம் ரோகிணி நட்சத்திரத்தில் ஸ்ரீவத்சம் என்னும் திருமாலின் அம்சமாகப் பிறந்தார்.
3. பாணர் குலத்தில் பிறந்தவர். இசை பாடுவதில் சிறந்தவர்.
4. திருமாலின் அழகினைப் பொற்பாதம் முதல் கண்கள் வரை பாதாதி கேசமாகப் புகழ்ந்து பாடியுள்ளார்.
5. இவர் பாடிய பாசுரங்கள் “அமலானதிபிரான்” எனத் தொடங்கும் 10 பாசுரங்கள் ஆகும்.
6. திருமாலின் மேல் கொண்ட காதலால்,

**“கொண்டல் வண்ணனைக் கோவலனாய் வெண்ணெய்**
**உண்ட வாயன்என் உள்ளம் கவர்ந்தானை**
**அண்டர் கோன்அணி அரங்கன் என்அமுதினைக்**
**கண்ட கண்கள் மற்று ஒன்றினைக் காணாவே”**

என்று புகழ்ந்து பாடியுள்ளார்.

7. காலம் கி. பி. 9-ஆம் நூற்றாண்டு என்பர்.

## 5. திருமழிசை ஆழ்வார்

1. காஞ்சிபுரத்திற்கு அருகில் உள்ள திருமழிசையில் பிறந்தவர்.
2. தை மாதம் மக நட்சத்திரத்தில் திருமாலின் சக்கர அம்சமாகப் பிறந்தார்.
3. சைவத்திற்கு திருமூலர் போன்று வைணவத்திற்கு திருமழிசை ஆழ்வார்.
4. இவ்வாழ்வாருக்குப் ‘பக்திசாரர்’ என்னும் பெயரும் உண்டு.
5. சென்னை திருவல்லிக்கேணியில் நீண்ட நாட்கள் தவமிருந்தார்.
6. இவர் திருச்சந்தவிருத்தம், நான்முகன்திருவந்தாதி ஆகிய இருநூல்களைப் பாடியுள்ளார்.

7. *திருமாலை.*

**"உன்னையன்றி நானில்லை என்னையன்றி நீ இல்லை"**

*என்றும்*

**"என் தொழிலெல்லாம் உன்னைத் தொழுவது;**
**பொழுதெல்லாம் உன்னைப் புகழ்வதே"**

*என்றும் புகழ்ந்து பாடியுள்ளார்.*

**"கணிக்கண்ணன் போகிறான் காமரும் பூங்கச்சி**
**மணி வண்ணா நீ கிடக்க வேண்டா"**

*என்ற புகழ்மிக்கப் பாடலைப் பாடியவர்.*

8. *காலம் கி. பி. 7ஆம் நூற்றாண்டு என்பர்.,*

## 6. நம்மாழ்வார்

1. *திருநெல்வேலிக்கு அருகேயுள்ள ஆழ்வார் திருநகரில் பிறந்தவர். இவரின் தந்தையார் மாறன்காரி. பராந்தகன் நெடுஞ்சடையனின் அமைச்சராக இருந்தவர்.*
2. *ஆழ்வார்களில் தலைசிறந்தவர்.*
3. *இவருக்கு 'சடகோபர்' என்ற புனைப்பெயரும் உண்டு. 'பரரங்குசர்' என்றும் அழைக்கப்படுவார்.*
4. *பிறந்தது முதல் பேசாமல் புளியமரத்தடியில் இருந்து திருமாலின் அருளால் பேசியவர்.*
5. *திருவாசிரியம், திருவாய்மொழி, திருவிருத்தம், பெரிய திருவந்தாதி என்ற நான்கு நூல்களை இயற்றியுள்ளார். திருவாய்மொழியை 'திராவிட வேதம்' என்றும் சிறப்பித்துச் சொல்வர்.*
6. *நம்மாழ்வாரை வைணவ சமயத்து மாணிக்கவாசகர் என்றும் அழைப்பர். ஆதிசேடனின் அவதாரம் என்பர்.*
7. *வைணவ சமயத்தின் சதுர்வேதங்களாக இந்நூல்களைப் போற்றுவதுண்டு.*
8. *ஆகாயத்தில் தோன்றும் திங்களைப் பார்த்து "ஒளி மணிவண்ணனே" என்றும், நீள் மலையைப் பார்த்து "நெடுமால்" என்றும், வானத்திலிருந்து பொழியும் மழையைப் பார்த்து "நாராயணன் வருகை" என்றும் பாடியவர். அதோடு உண்ணும் உணவும், பருகும் நீரும் நாராயணனே என்றவர். மேலும் இறைவனை,*

"பூவையும் காயாவும் நீலமும் பூக்கின்ற
காவிமல ரென்றும் காண்டொறும் - பாவியோன்
மெல்லாவி மெய்மிகவே பூரிக்கும் அவ்வவை
எல்லாம் பிரான்உரு வே"

என்கிறார்.

9. குருகைக் காவலன், காரிமாறன், தமிழ்மாறன், வேதம் செய்த தமிழ்மாறன், வகுளாபரணன் என்ற சிறப்புப் பெயரும் உண்டு.

10. காலம் கி. பி. 9-ஆம் நூற்றாண்டு என்பர்.

## 7. மதுரகவியாழ்வார்

1. பாண்டிய நாட்டில் திருக்கோளூரில் பிறந்தார்.
2. நம்மாழ்வாரின் சீடர்.
3. ஒரு ஒளிப்பிளம்பு வழிநடத்தி இவரை நம்மாழ்வாரிடம் சேர்ப்பித்தது என்பர்.
4. திருமாலைக் கூடப்பாடாது நம்மாழ்வாரைப் புகழ்ந்து பாடியவர். நம்மாழ்வாரை ஞான ஆசிரியராக ஏற்றுக்கொண்டவர்.
5. நம்மாழ்வாரை இவர் புகழ்ந்து பாடிய 11 பாடல்களும்

"கண்ணிநுண் சிறுத்தாம்பு"

என்று அழைக்கப்படுகிறது.

6. நம்மாழ்வாரின் அனைத்துப் பாடல்களையும் தன் கைகளால் எழுதியவர்.
7. காலம் கி. பி. 9-ஆம் நூற்றாண்டு என்பர்.

## 8. பெரியாழ்வார்

1. தென்பாண்டி நாட்டிலுள்ள ஸ்ரீவில்லிபுத்தூரில் பிறந்தவர்.
2. ஆனி மாதம் சுவாதி நட்சத்திரத்தில் திருமாலின் கருட அம்சமாகப் பிறந்தார்.
3. இவரின் இயற்பெயர் விஷ்ணு சித்தர்.
4. இவரை பட்டர் பிரான் என்றும் அழைப்பர்.
5. ஸ்ரீவில்லிபுத்தூரில் நந்தவனம் அமைத்து பூமாலையோடு பாமாலையும் திருமாலுக்குச் சூட்டியவர்.
6. பெரியாழ்வார் திருமொழி, திருப்பல்லாண்டு ஆகிய இருநூல்களை திருமாலைப் புகழ்ந்து பாடியுள்ளார்.

7. *திருமாலின் அழகினையும், அவரின் புகழ் நிலைத்து நிற்கவும்,*

**"பல்லாண்டு பல்லாண்டு பல்லாயிரத்தாண்டு**
**பலகோடி நூறாயிரம் மல்லாண்ட திண்தோள் மணிவண்ணா"**

*என்று பாடியுள்ளார்.*

8. *பிற்காலப் பிள்ளைத்தமிழ் நூலுக்கு வித்திட்டதே இவரின் பாடல்களாகும்.*

**"கிடக்கில் தொட்டில் கிழிய உதைத்திடும்**
**எடுத்துக் கொள்ளில் மருங்கை இறுத்திடும்"**

*என்று திருமாலைப் பாடுகிறார்.*

9. *காலம் கி. பி. 9-ஆம் நூற்றாண்டு என்பர்.*

## 9. ஆண்டாள்

1. *பெரியாழ்வார் வளர்த்த வளர்ப்பு மகள் ஆவார்.*
2. *இவர் அணிந்த மலர் மாலையை இறைவன் மனமுவந்து ஏற்றதால் "சூடிக்கொடுத்த நாச்சியார்" என்றும் அழைக்கப் படுகிறார்.*
3. *நந்தவனத்தில் துளசிச் செடிக்கு அருகில் கண்டெடுக்கப்பட்டு பெரியாழ்வாரால் வளர்க்கப்பட்ட தெய்வக் குழந்தை ஆண்டாள்.*
4. *பன்னிரு ஆழ்வார்களில் ஆண்டாள் மட்டுமே பெண் ஆழ்வார்.*
5. *இறைவனைக் காதலனாகவும், தம்மைக் காதலியாகவும் நினைத்து நாச்சியார் திருமொழி (143 பாடல்கள்), திருப்பாவை (38 பாடல்கள்) என இரு நூல்களைப் பாடியுள்ளார்.*
6. *மார்கழித் திங்களில் பெண்களை,*

**"மார்கழித் திங்கள், மதி நிறைந்த நன்னாளில்**
**நீராடப் போதுவீர், போதுமினோ நேரிழையீர்**
**சீர்மல்கும் ஆய்பாடிச் செல்வச் சிறுமீர்காள்**
**கூர்வேற் கொடுந் தொழிலன் நந்தகோபன் குமரன்**
**ஏதாந்த கண்ணி யசோதை இளஞ்சிங்கம்"**

*என்று பாடி நீராட அழைக்கிறார்.*

7. *"மானிடர்க்கு என்று பேச்சுப்படில் வாழ்கில்லேன் கண்டாய் மன்மதனே" என்று திருமாலையே நினைத்து வாழ்ந்தவர்.*
8. *காலம் கி. பி. 9-ஆம் நூற்றாண்டு என்பர்.*

## 10. திருமங்கையாழ்வார்

1. சோழநாட்டில் உள்ள திருக்குறையலூரில் பிறந்தவர். கார்த்திகை மாதம் வில்லின் அம்சமாகப் பிறந்தார்.
2. கள்ளர் குலத்தைச் சார்ந்தவர். இவரை 'பரகாலன்' என்றும் அழைப்பர். இவரின் இயற்பெயர் 'நீலன்' ஆகும்.
3. 'திருமங்கை மன்னன்' என்னும் பெயர் உடையவர். வைணவ அடியார்க்கு தினமும் உணவளித்தவர். இருவருடைய பாடல்கள் நாட்டுப் புறப்பாடல் வடிவத்தில் காணப்படும். (உதா) "கரையாய் காக்கை பின்னாய் - கரு மாமுகில் போ நிறத்தன்".
4. ஸ்ரீரங்கம் கோயில் மூன்றாம் சுற்று சுவரைக் கட்டியவர்.
5. இவர் பெரியதிருமடல், திருக்குறுந்தாண்டகம், திருநெடுந்தாண்டகம், திருவெழுக் கூற்றிருக்கை, பெரியதிருமொழி, சிறியதிருமடல் போன்ற ஆறு நூல்களைப் பாடியுள்ளார்.
6. காலம் கி. பி. 9-ஆம் நூற்றாண்டு என்பர்.

## 11. தொண்டரடிப் பொடியாழ்வார்

1. இவருடைய இயற்பெயர் விப்ர நாராயணர்.
2. அந்தணர் குலத்தைச் சார்ந்தவர்.
3. திருவரங்கத்தில் திருமாலுக்கு மாலை சூட்ட ஆலயவளாகத்திற்குள் தோட்டம் அமைத்து திருமாலுக்கு மாலை சூட்டியவர்.
4. திருமாலைப் புகழ்ந்து இரண்டு நூற்களை எழுதியுள்ளார்.
   1. திருமாலை (45 பாடல்கள்)
   2. திருப்பள்ளியெழுச்சி (10 பாடல்கள்)
5. இவரின் திருப்பள்ளியெழுச்சி மாணிக்கவாசகரின் திருப்பள்ளி யெழுச்சியுடன் ஒப்பிடும் சிறப்பை உடையதாகும்.
6. காலம் கி. பி. 9-ஆம் நூற்றாண்டு என்பர்.

## 12. குலசேகர ஆழ்வார்

1. சேரநாட்டில் திருவஞ்சைக் களத்தில் பிறந்தவர். திருடவரதன் என்ற மன்னனின் மகன். திருமாலின் கௌத்துவ மணியின் அம்சமாகப் பிறந்தவர்.
2. தமிழும், வடமொழியும் நன்கறிந்தவர்.
3. திருமால் மீதுள்ள அன்பால் சிம்மாசனத்தைத் துறந்த வைணவ பக்தர்.

4. இவர் தம்மைத் தானே கொல்லிக்காவலன், கூடல்காவலன், கோழிக்கோன் எனக் கூறிக்கொள்வதால் சோழ, பாண்டிய நாட்டிற்கும் தலைவராக இருந்திருக்கலாம் என்று நம்பப்படுகிறது.
5. திருமாலைப் புகழ்ந்து இருநூல்களை எழுதியுள்ளார்.
6. தமிழ்மொழியில் பெருமாள் திருமொழியும், வடமொழியில் முகுந்தமாலையும் எழுதியுள்ளார்.
7. எத்தனை துன்பங்கள் வந்தாலும் திருமாலை மறவேன் என்பதை,

**“வாளால் அறுத்துச் சுடினும் மருத்துவன் பால்**
**மாளாத காதல்நோ யாளன்போல் மாயத்தால்**
**மீளாத துயர்தரினும் வித்துவக்கோட் டம்மாநீ**
**ஆளா வுனதருளே பார்ப்பன் அடியேனே”**

எனப் பாடுகிறார்.

8. திருவேங்கடத்து மலையில் பறவையாய், மீனாய், ஆறாய், மரமாய் பிறக்க ஆசைப்பட்டவர். அதனால் இன்றும் திருவேங்கடப்படிகள் குலசேகரப்படிகள் என்று அழைக்கப்படுகிறது.
9. காலம் கி. பி. 9-ஆம் நூற்றாண்டு என்பர்.

| வரிசை எண் | ஆழ்வார்கள் | நூல்கள் | காலம் |
|---|---|---|---|
| 1. | பொய்கையாழ்வார் | முதல் திருவந்தாதி | 6-ஆம் நூற்றாண்டு |
| 2. | பூதத்தாழ்வார் | இரண்டாம் திருவந்தாதி | 6-ஆம் நூற்றாண்டு |
| 3. | பேயாழ்வார் | மூன்றாம் திருவந்தாதி | 6-ஆம் நூற்றாண்டு |
| 4. | திருப்பாணாழ்வார் | திருச்சந்த விருத்தம், அமலானதிபிரான் எனத் தொடங்கும் 10 பதிகம் | 9-ஆம் நூற்றாண்டு |
| 5. | திருமழிசையாழ்வார் | நான்முகன் திருவந்தாதி | 7-ஆம் நூற்றாண்டு |
| 6. | நம்மாழ்வார் | திருவாசிரியம், திருவாய்மொழி திருவிருத்தம், பெரிய திருவந்தாதி | 9-ஆம் நூற்றாண்டு |

| | | | |
|---|---|---|---|
| 7. | மதுரகவியாழ்வார் | கண்ணி நுண் சிறுதாம்பு பதிகம் | 9-ஆம் நூற்றாண்டு |
| 8. | பெரியாழ்வார் | பெரியாழ்வார் திருமொழி, திருப்பல்லாண்டு | 9-ஆம் நூற்றாண்டு |
| 9. | ஆண்டாள் | நாச்சியார் திருமொழி, திருப்பாவை | 9-ஆம் நூற்றாண்டு |
| 10. | திருமங்கையாழ்வார் | பெரிய திருமொழி, திருக்குறுந்தாண்டகம், திருநெடுந் தாண்டகம், சிறிய திருமடல், பெரிய திருமடல், திருவெழுக் கூற்றிருக்கை | 9-ஆம் நூற்றாண்டு |
| 11. | தொண்டரடிப் பொடியாழ்வார் | திருமாலை, திருப் பள்ளியெழுச்சி | 9-ஆம் நூற்றாண்டு |
| 12. | குலசேகர ஆழ்வார் | பெருமாள் திருமொழி | 9-ஆம் நூற்றாண்டு |

ஆழ்வார்கள் பாடிய 4000 பாடல்களையும் தொகுத்து நாலாயிர திவ்வியப்பிரபந்தம் என்றழைக்கின்றனர். இந்நூலை வைணவசமயத்தின் வழிபாட்டு நூலாக இராமானுஜர் உயர்த்தினார். வைணவ சமயத்தினர் திருமாலின் சிறப்புகளைத் தமிழகம் முழுவதும் பறைசாற்றியதோடு, தமிழின் சிறப்பையும், தமிழ்மொழியின் மேன்மையும் பறைசாற்றினர். வில்லிபுத்தூரார் எழுதிய பாரதமும், கம்பரின் கம்பராமாயணமும் வைணவத்தின் சிறப்பினைப் பறைசாற்றும் பிற்கால வைணவ இலக்கியங்களே ஆகும்.

# சைவ மடங்கள் வளர்த்த தமிழ்

*பழந்தமிழ் இலக்கியங்களைப் பாதுகாத்தலும், அவற்றினைப் பதிப்பித்தலிலும், தமிழ்மொழி வளர்ச்சிக்கு பெருந்துணை புரிந்துள்ளன சைவ மடங்கள். தமிழறிவு மிக்க புலவர்கள் பலர் தங்கியிருந்து தமிழ்த்தொண்டு புரிந்ததோடு ஏராளமான புதிய நூல்களையும் இயற்றினர். பல நூல்களுக்கு உரை எழுதினர். மடங்களின் ஆதினத் தலைவர்களும் தமிழ்ப் புலமை நிரம்பியிருந்தனர்.*

## திருவாடுதுறை ஆதினம்

*சைவ ஆதினங்கள் வரிசையில் முதலிடம் பெறும் இம்மடத்தை நமச்சிவாய மூர்த்திகள் நிறுவினார். தமிழ்ப் புலமைமிக்க இவர் வினாவெண்பா, இருபா இருபஃது ஆகிய சைவ சித்தாந்த சாத்திரங்களுக்கு உரை எழுதினார். தட்சணாமூர்த்தி தேசிகர் தசகாரியம், உபதேசப் பஃறொடை வெண்பா ஆகிய நூல்களை எழுதினார். இந்த மடத்தின் தலைவராக இருந்த அம்பலவாண தேசிகர் தசகாரியம், சன்மார்க்க சித்தியார், சிவாசிரமத் தெளிவு, சித்தாந்தப் பஃறொடை, உபதேச வெண்பா, நிட்டை விளக்கம், அதிசயமாலை, நமச்சிவாயமாலை ஆகிய நூல்களையும், சங்கர நமச்சிவாயர் நன்னூலுக்கும் உரை செய்தனர். இம் மடத்தைச் சார்ந்த சிவஞான முனிவர் 29 நூல்களையும், சுவாமிநாத தேசிகர் "இலக்கணக் கொத்து" என்ற நூலையும், கச்சியப்பர் தணிகைப் புராணம் முதலான புராண நூல்களையும் இயற்றினார். இந்த மடத்திலிருந்து "மெய்கண்டார்" என்ற திங்களிதழ் தொடர்ச்சியாக வெளிவந்து கொண்டிருக்கிறது.*

## தருமபுர ஆதினம்

*சைவ ஆதின வரிசையில் இரண்டாம் இடம்பெறும் இம்மடத்தை குருஞான சம்பந்த தேசிகர் நிறுவினார். தமிழ்ப் புலமைமிக்க இவர் சிவபோகசாரம், சொக்கநாத வெண்பா, பரமானந்த விளக்கம், முத்தி நிச்சயம் முதலான எட்டு நூல்களை இயற்றியுள்ளார்.*

*தத்துவப் பிரகாசர் 'தத்துவப் பிரகாசம்' என்ற நூலையும் கமலை ஞானப் பிரகாசர் சிவானந்தபோதம், பிரசாதக் கட்டளை, சிவபூஜை அகவல் போன்ற சமய நூல்களையும் இயற்றியுள்ளனர். தேவாரத் திருமுறைகட்குப் பேருரையும், திருக்குறள் உரைகளையெல்லாம் தொகுத்து "திருக்குறள் உரைவளம்" என்ற நூலையும் இம்மடம்*